Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 13
இதழ் 1
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் தை 29 ஜுஹஜ் 14 வியாழக்கிழமை (11-2-71)

11 FEB 1971
UNDERGRADUATE LIBRARY

நீலமின்றி
நிரற்ற
வெண்மை
தருவது




விஜயாஸ்
நீல சோப்
எங்கும் கிடைக்கும்
முருகானந்தா
குடிசைக் கைத்தொழிற்சாலை
முகமாலை — எழுதுமட்டுவாள்

# ‘மரவரி முறையை மாற்றாமல் அபிவிருத்திசெய்யவேண்டும்’

## பனம் பொருள் ஆராய்ச்சிக் குழு முன் வட்டு எம்.பி. கருத்து

[ நமது நிருபர் கு. வி. மகாலிங்கம் ]

யாழ்ப்பாணம், வியாழன்

அரசாங்கம் ஊக்கமளிக்காததிலும், இடையில் கரகர்களின் தொல்லைகளினாலுமே கடந்த காலத்தில் இந்நாட்டில் பனம்பொருள் உற்பத்தி முன்னேற்றமடையவில்லை. பனம் பொருள்களை நவீன முறையில் உற்பத்தி செய்வதன் மூலம் வருமானத்தை அதிகரிப்பதோடு சுயதேவைகளையும் பூர்த்தி செய்யலாம்

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் நடந்த பனம் பொருளாராய்ச்சி குழு முன்னிலையில், வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. தியாகராசா நேற்று மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நீதியரசர் வி. சிவசுப்பிரமணியம் தலைமையில் உள்ள இக்குழு முன்னிலையில் எம். பிக்களும், காரியாதிகாரிகளும், நேற்று தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர்.

தமிழ்க் காங்கிரஸ் எம் பிக்களான திரு ஏ. தியாகராசா திரு வி. ஆனந்தசங்கரி நியமன எம். பி திரு எம். சி. சுப்பிரமணியம் ஆகியோர் வந்திருந்தனர். தமிழரசுக் கட்சி எம். பிக்களோ மேற்சபை உறுப்பினர்களோ கலந்து கொள்ளவில்லை.

உதவி அரசாங்க அதிபர் திரு ரி முருகேசம்பிள்ளை வடபகுதியில் பனம்பொருள் உற்பத்தி பற்றி விளக்கமாக கூறினார்.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. தியாகராசா மேலும் கூறியதாவது: சிங்கள மக்கள் தினமும், விசேஷபஸ்களில் யாழ்ப்பாணம் வந்து இங்கு உற்பத்தியான பல்வேறு பொருட்களை வாங்கிச் செல்வதை காண்கிறோம். ஆதலால் உல்லாசப் பிரயாணிகளை கவரக்கூடிய நவீன பனம் பொருள் உற்பத்திகளை தயாரித்தால் அவற்றை இலகுவில் விற்பனை செய்யமுடியும் தற்பொழுதுக்ஸலா வில்களுந்துறைகண்டி மற்றும்பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் விற்பனைக்கிருக்கின்றன இதேபோல் சலுசலா மூலம் நவீனபனம் பொருள் பத்திகளையும் விற்பனை செய்யலாம்.

மர வரிமுறையை மாற்றுமல் அதனை சீர்திருத்தி பனங்கட்டி உற்பத்தியை அதிகரிக்கலாம் ஒவ்வொரு கள்ளு சீவும்மரங்களுக்குப் பதிலாக ஒவ்வொரு கருப்பணி சீவும் மரங்கள் இருக்கவேண்டும் எனக் கட்டாயப்படுத்த வேண்டும்.

பனம்பொருள் உற்பத்தியாளர்களுக்கும், பனைமரச் சொந்தகாரர்களுக்கு மிடையில் ஒரு நிரந்தர ஏற்பாட்டை சட்ட மூலம் செய்வதன் மூலம் பனம்பொருள் உற்பத்தியை அதிகரிக்கலாம்.

பனம் பொருளாராய்ச்சி குழு உறுப்பினர்கள் விபரம் திரு. வி. சிவசுப்பிரமணியம் (தலைவர்) திரு எ எஸ் ஜெயவர்த்தனு (செயலாளர்) பேராசிரியர் கே குலரத்தினம் பேராசிரியர் எம் பி பெரேராபாரிஸ்டர் வி சச்சிதானந்தம் திரு எஸ் செல்லையா (சிறுபான்மை தமிழர் மகாசபை நிர்வாகக்காரியதரிசி) திரு. கே வேலுப்பிள்ளை.

வடபகுதியில் பனம் பொருள் ஆராய்ச்சிநிலையம் நிறுவுவது சம்பந்தமாக ஆராய்வதற்காக பனம் பொருள் ஆராய்ச்சிக்குழு ஒருவாரம் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும்.

விசாரணைகளை நடாத்துவதுடன் பனம் பொருள் உற்பத்தி சம்பந்தமாகவும் ஆராயும்.

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் இன்றும் காலை 9 மணி முதல் மாலை 4-30 மணிவரவாய் மூலம் சாட்சியங்களை இக்குழு பதிவு செய்யும்.

13, 14, 15-ம் திகதிகளில் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று இக்குழு இடங்களைப்பார் வையிடவுள்ளது.

13-ம் திகதி காலை வடமராட்சி காரியாதிகாரி பிரிவுகளையும் மாலை வலிகாமம் வடக்கு, கிழக்கு.

(5-ம் பக்கம் பார்க்க)

## ‘போராட்டம் மூலமே விடுதலை பெற முடியும்’

— அமிர்

மாவிட்டபுரம், புதன்

“தமிழினம் ஒற்றுமைப்பட்டு உரிமைப் போராட்டம் நடாத்துவதன் மூலமே விடுதலை பெற முடியும்” என்று தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் மல்லாகத்தில் கூறினார்.

மல்லாகம் ரயில் நிலையத்துக்கு அருகாமையில்நடந்த தமிழரசுக் கட்சிப் பிரசாரக் கூட்டத்தில் அவர் பேசுகையிலேயேமேற்கண்டவாறு சொன்னார்.

திரு. த. துரைரத்தினம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. அ. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

இக்கட்டான நிலையில் இன்று நாம் வாழ்கிறோம். என்ன செய்யவேண்டும் எப்படி நாம் முன்னேற வேண்டும் என்ற கேள்விகள் இன்றும் எம்மிடத்தில் எழுந்துள்ளன.

சோஷலிசம் சமதர்மம் பேசும் அரசு தமிழ் மக்களுக்கு நீதி வழங்கும் உண்மையான சோஷலிஷத்தை இந்நாட்டில் ஏற்படுத்திஎம்மை சரிநிகர் சமுதாயமாக மாற்றும் என நாம் நினைத்தோம் ஆனால் இன்று இவற்றுக்கு முற்றுப்புள்ளிவைத்து புதிய சோஷலிசம் ஒன்றை ஏற்படுத்த அ சு முனைந்துள்ளது வெளிநாடுகளில்சோஷலிசம் என்றால் சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பு அளித்து பெரும் பான்மை மக்களுடன் சம உரிமையுடன் வாழச்செய்வதாக இருக்கிறது. ஆனால் இலங்கையில் மட்டும் சிறுபான்மை இனமான எம்மை அழித்து ஒரே இனம் சமயம் ஆகியவற்றை உருவாக்க முனைவது சோஷலிசமா?.

## நாடு பூராவும் தமிழில் வர்த்தக நடவடிக்கை

### இ. தொ. க. திருத்தம்

கொழும்பு, புதன்

1948-ம் ஆண்டு இலங்கை பிரஜாவுரிமைச் சட்டத்தின் பின்பு வேறு எந்த நாட்டிலும் பிரஜாவுரிமை பெறாதவர்கள் அல்லது இலங்கையில் பிறந்த ஒவ்வொருவருக்கும் அல்லது அவர்களுடைய தாயோ தந்தையோ இலங்கைப்பிரஜையாக இருந்தால் அவர்களுக்கு இலங்கையில் புதிய அரசியல் சாஸனத்தின் கீழ் பிரஜாவுரிமை அளிக்கப்படவேண்டுமென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கேட்டுக்கொண்டுள்ளது

புதிய அரசியல் திட்டத்துக்கான அடிப்படைத் தீர்மானங்களுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் திருத்தங்கள் சமர்ப்பித்துள்ளது உத்தேச தங்கள் அரசியல் திட்ட அமைச்சினை அங்கீகரிக்கப்பட்டால்இந்திய வம்சாவழியினர் அனைவரும் இலங்கைப்பிரஜைகள் வர்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சமர்ப்பித்துள்ள திருத்தங்கள்பின்வருமாறு:-

- நீதிசபை சுதந்திரமாக இயங்கவேண்டும்
- இலங்கை முழுவதிலும் பொது வர்த்தகத்தொடர்புகளில் தமிழ் பயன்படுத்தக் கூடியதாகஉத்தரவாதமளிக்கப்படல்வேண்டும்
- மேல்சபைஇருக்கவேண்டும்
- அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கத் தலைவர்களை வாக்குகளால் தெரிவுசெய்ய அனுமதிக்கவேண்டும்

(சி பி ஏ)

## தமிழரசு எம். பி. க்களுக்கு அழைப்பு அனுப்பவில்லை

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த பனம்பொருளாராய்ச்சிக் குழு நடத்திய விசாரணைக்கு தமிழரசுக் கட்சி எம். பிக்களுக்கு அழைப்பு அனுப்பப்படவில்லையென்று உடுவில் எம் பி திரு. வி. தர்மலிங்கம் தெரிவித்தார்.

திரு தர்மலிங்கம் நேற்றுக் காலை அரசாங்க செயலகத்திற்கு வேறு அலுவலாக வந்தபோது அங்குள்ள உத்தியோகத்தர் ஒருவர் பனம் பொருளாராய்ச்சிக் குழுக் கூட்டத்திற்கு செல்லவில்லையா? என்று அவரைக் கேட்டார். அழைப்புக் கிடைக்காததால் போகவில்லையென உடுவில் எம். பி. பதிலளித்தார்.

தங்களுக்கு கூட்டம் பற்றி எவ்வித அழைப்பும் கிடைக்கவில்லையென ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினமும் தெரிவித்தார்.

பனம் பொருளாராய்ச்சிக் குழுக் கூட்டத்தில் தமிழ்க் காங்கிரசைச் சேர்ந்த திரு. ஏ. தியாகராசா, திரு. வி ஆனந்தசங்கரி, நியமன எம். பி திரு. எம். சி. சுப்பிரமணியம் ஆகியோர் மட்டுமேகலந்துகொண்டனர்.

## பஸ் கட்டணம் மார்ச் முதல் உயரலாம்

கோட்டை, புதன்

வருகிற மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் பஸ் கட்டணம் 5 சதத்திலிருந்து 10 சதமாக அதிகரிக்கப்படலாம் இது சம்பந்தமாக நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இம்முடிவு எடுக்கப் பட்டுள்ளபோதிலும் மந்திரிசபையின் அங்கீகாரம் பெறப்படவில்லை.

அங்கீகாரம் கிடைக்கப் பெற்றால் மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் நாடு பூராவும் இபோச கட்டணம் உயரும் என எதிர் பார்க்கப்படுகிறது

## பூட்டான் மனு பாதுகாப்புச் சபை அங்கீகாரம்

ஐ நா உறுப்பு நாடாக ஏற்றுக்கொள்ளும்படி கோரி பூட்டான் சமர்ப்பித்த விண்ணப்பத்தை பாதுகாப்புச்சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டுள்ளது. இனி மகாசபை இதனை அங்கீகரித்த பின் பூட்டான் ஐ நா உறுப்பு நாடாகும்.

## வரி விளம்பரம்


**விற்பனைக்கு**

நல்லூரில் எட்டு அறைகளுள்ள புதிய வீடும் மூன்று பரப்புக்காணியும் முப்பத்தையாயிரம். கடனுமுண்டு. ஒன்பது பரப்புக்காணி முழுவதும் இருபத்தேழாயிரம். துண்டுகளாகவும் வாங்கலாம் உரிமையாளரின் விலாசம்! 92, பரித்தித்துறை வீதி, ஆனைப்பந்தி 2817

காணி:

யாழ்ப்பாணம், அம்பலவாணர் றோட்டில் 2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு பொ. திவ்வியநாதன், 129, அம்பலவாணர் றோட், யாழ்ப்பாணம். 2460

கொம்மர் 15 அந்தர் டீசல் வான் புதிய நிலைமையில் விற்பனைக்கு உண்டு அரஸ்கோ இன்டஸ்றீஸ் பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 2818

**தேவை**

அனுபவமும் தகுதியும் வாய்ந்த 'நர்ஸ்' தேவை தகுதி தேற்றசம்பளம் 20-2-71-க்கு முன் விண்ணப்பிக்கவும். செயலாளர் கூட்டுறவு வைத்தியசாலை, வல்லை, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை 2816



கிளிநொச்சிப் பட்டண சபை பரந்தன் சந்தை மாட்டிறைச்சி வியாபாரக்

### குத்தகை விளம்பரம்

குத்தகைக்காலம் 1-3-71 தொடக்கம் 31-12-71 முடியும்வரை

பரந்தன் சந்தை மைதானத்தில் மாட்டிறைச்சிக் கடை ஒன்று அமைத்து 1-3-71 தொடக்கம் 31-12-71 வரையிலான காலத்துக்குக் குத்தகையாக எடுத்து (அத்தியாயம் 272) கசாப்புச் சட்டத்திற்கு அமைய இறைச்சி விற்பனை செய்வதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 1971-ம் ஆண்டு மாசி மாதம் 15-ம் திகதி முற்பகல் 10 00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப் பிணைப்பணம் ரூபா 200/- கேள்விப் பத்திரப் பணம் (திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது) ரூபா 10/- செலுத்தி 1971-ம் ஆண்டு மாசி மாதம் 15-ந் திகதி முற்பகல் 9-30 மணி வரை இச்சபை அலுவலகத்தில் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

ச. சு. முருகேசு
தலைவர்,
பட்டணசபை,
கிளிநொச்சி.

பட்டணசபை அலுவலகம்,
கிளிநொச்சி.
8-2-71 2770


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**வியாழன் 11—2—71**

(செய்திகள்: காலை 6-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அலை 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 இசை வேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

**344 மீ. அலை 61 மீ.**

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்தநாள் வாழ்த்துக்கள், 5-30 வளரும் பயிர்.

இரவு 6-15 இசைப்பயிற்சி 7-00 இசை நிகழ்ச்சி, 7-15 பாட்டு, 7-45 செய்திச் சுருள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி 9-30 பேச்சு, 9 40 நாதஸ்வரம், 10 30 செய்தித் தொகுப்பு.

## மீன்பிடி அபிவிருத்தி சபை

பச்சிலைப்பள்ளி, புதன்

மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்யும் பச்சிலைப் பள்ளி காரியாதிகாரி திரு சோ. அருணாசலம் தலைமையில் மீனபிடி அபிவிருத்திச்சபைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கிராமசேவையாளர்கள் மீன்பிடிச்சங்க உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## 'செங்கதிர்' செல்வர் பண்ணைக்கு குமாரசூரியர் பாராட்டு

யாழ்ப்பாணம், வியா.

தபால் தந்தி அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் கொழும்புத் துறைமுகத்திலுள்ள 'செங்கதிர்'ச்செல்வர் பண்ணைத் திட்டத்துக்கு நேற்று முன்தினம் மாலை விஜயம் செய்தார். இப்பண்ணைத்திட்டத்தின் முக்கிய பங்காளரான திரு. பி சே பொன்னம்பலம் அமைச்சரை வரவேற்றார்

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த அமைச்சர் செங்கதிர் செல்வர் பண்ணைத் திட்ட நிர்வாகிகளின் விசேஷ அழைப்பை ஏற்று இங்கு விஜயம் செய்தார்

'செங்கதிர்' பண்ணையைச் சுற்றிப் பார்வையிட்டு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குப் பெரும் பங்கு ஆற்றுவதாகப் பாராட்டினார்

இப்படியான பண்ணைத் திட்டங்களுக்கு அரசாங்கத்தின் உதவி கிடைக்குமென்றும் கூறினார்

'செங்கதிர்ச் செல்வர்' கல்விச் சேவைப் பகுதியால் நடாத்தப்படும் 'செங்கதிர்' மாதச் சஞ்சிகையும் அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது

## இன்றைய பலன்

தை மாதம் 29-ந் திகதி (11-2-71)

மேடம்- பூமிப் பிணக்கில் ஒரு சமரச முடிவு ஏற்படலாம். வழக்குவிவகாரங்கள் தவிர்க்கப்படும் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்

இடபம்- இளமைநினைவுகள் நிழலாட்டம் போடும் காதல் கணை தாக்கும். கவிஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள்.

மிதுனம்- சிந்தனையில் குழப்பநிலை உருவாகும். விவசாயத்துறை மூலம் நஷ்டமேற்படலாம் அதிக முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும்.

கடகம்- சிறிய விபத்திற்குக் கூட அதிக ஆத்திரம் தோன்றக்கூடும். மற்றவர்களின் குறுக்குவழித்தலையீடும் இடம்பெறும்.

சிம்மம்- பேச்சுவன்மையினால் பெரும் புகழ் கிடைக்கும். பெரியஇடத்து சகவாசம் உங்கள் செல்வாக்கைத் தேடித்தரும்.

கன்னி- தந்தை மூலம் தடுமாற்றம் ஏற்படும். கண்துடைப்பு வேலை நடைபெறும். பொறுமையைப் பேணி நடக்கவும்

துலாம்- சொன்னவைகளில் நல்ல திருப்பம் ஏற்படும் வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு. மகிழ்ச்சியான தினம்.

விருச்சிகம்- அறவழியில் நாட்டம் செல்லும். வேதாந்த சிந்தனைகள் தலைதூக்கும். இரகசிந்தனையின் மூலம் பொருட்செலவுண்டு

தனுசு- எடுத்த காரியம் நஷ்டத்தில் முடியலாம். சிலர் வாழ்க்கையில் கடன்படவும் நேரிடும். சும்மா இருப்பதே சுகம்.

மகரம்- காதல் விவகாரங்கள் தலைதூக்கும். இனிமையான சம்பவங்கள் இடம்பெறும். கண்ணியமான தினம்.

கும்பம்- தொழில்புரியுமிடத்தில் தொல்லைகள் தோன்றக்கூடும். இதன் மூலம் பொருள் விரயத்திற்கும் இடமுண்டு

மீனம்- குடும்பஸ்தர்களின் வாழ்வில் குதூகலம் நிலவும். களஸ்திர வழியால் நன்மைகள் வந்துசேரும். இன்று சனிவாரை தினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## கிணற்றில் தவறி விழுந்து மரணம்

மாவிட்டபுரம், புதன்

கிணற்றுக்குள் தவறி விழுந்தவயோதிபர் மரணமான பரிதாபகரமான சம்பவம் ஒன்று கீரிமலையில் நடைபெற்றது

கீரிமலையில் தனியாக ஒரு வீட்டில் வசித்துவந்த யோகசுவாசு சின்னையா (75 வயது) என்பவர் தமது வீட்டுக்கு அருகாமையில் உள்ள கிணறு ஒன்றில் இறந்து இடந்ததைக்கண்டு ஆசிரியர் சின்னத்தம்பி என்பவர் காங்கேசன்துறை பொலிசுக்குப் புகார் செய்திருந்தார்

இதுகுறித்து விசாரணை நடாத்திய மரணவிசாரணை அதிகாரி திரு எஸ். சுந்தரமூர்த்தி சாட்சியங்களைப் பதிவு செய்து தண்ணீர் அள்ளும் போது தவறுதலாக கிணற்றில் விழுந்திருக்கலாம் என்று கூறி விபத்துமரணம் எனத் தீர்ப்பளித்தார்.

பிரேதபரிசோதனையை காங்கேசன்துறை வைத்தியசாலை சுப்பிரின்டன் ஐ. பேரின்பநாயகம் செய்தார். திரு. எஸ் அந்தோனிப்பிள்ளை விசாரணைக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.


ராணி சினிமா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி கணேஷன் - ஜெயலலிதா
நடித்த
**எங்கிருந்தோ வந்தாள்**

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ராஜன் - வாணிஸ்ரீ - சோ
சிவகுமார்-குமாரி லட்சுமி
நடித்த
**அன்னையும் பிதாவும்**

5-வது வாரம்
**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயாநாட்கள் 4 காட்சிகள்
கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (கொழும்பு)
சிவாஜி
காஞ்சனா
எம். என்.
நம்பியார்
நாகேஷ்
மூத்துராமன்
இன்னும் பலர் நடித்த





**சி வ ந் த ம ண்**

கல்லுண்டாய்
நாகர்ஸ் சினிமா
தினசரி 6-30, 9-30
ஜெமினி - சாவித்திரி
நடித்த
**கொஞ்சும் சலங்கை**
(புதிய கொப்பி - கலர்)

ஸ்ரீ காலிங்கா
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 3-30
ஜெய்சங்கர் — பாரதி
நடித்த
**காதல் பறவை**

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 3-30, 6-30, 9-30
ஸ்ரீராம் - வீரப்பா - ருக்மணி
நடித்த
**முல்லைவனம்**

RAJAH Jaffna
Daily 3 Shows
Giuliano Gemma
in
BLOW HOT, BLOW COLD
(Color - Adults)

REGAL Jaffna
Daily 3 shows
Poya days 10-30 a. m.
Frederick Stafford
Dany Robin
in
TOPAZ
(adults only)

MANOHARA
Jaffna
Daily 3 Shows
THE LAST OF SECRET AGENT
(Spy Film in Color)

## ஸ்கிறிபிலிங் புளக்ஸ்
## (SCRIBBLING BLOCKS)

மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பல்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ளோருக்கு உபயோகிக்கக்கூடிய

**ஸ்கிறிபிலிங் புளக்ஸ்**

(200 தாள்கள் கொண்டவை)

கீழ்க்காணும் விலையில் விற்பனைக்குண்டு.

| | | | |
|---|---|---|---|
| 1-ம் நம்பர் | 8 1/2'' | X 11'' | ரூ. 2-25 சதம் |
| 2-ம் ,, | 7'' | X 10'' | ரூ. 1-75 ,, |
| 3-ம் ,, | 7'' | X 8 1/2'' | ரூ. 1-50 ,, |
| 4-ம் ,, | 5'' | X 8 1/2'' | ரூ. 1-25 ,, |
| 5-ம் ,, | 4'' | X 5 1/2'' | 75 ,, |

மொத்தமாக எடுக்கும் வியாபாரிகளுக்கு கழிவுண்டு

**ஈழநாடு**
வர்த்தக அச்சகப்பகுதி
சிவன்கோவில் மேலை வீதி, யாழ்ப்பாணம்.

# பூமிக்குத் திரும்பிய வீரர்கள் திடகாத்திரமாக இருக்கிறார்கள்

## ஒலீன்ஸ் கப்பலில் அமோக வரவேற்பு

ஹூஸ்டன், பெப் 10

**பசுபிக் சமுத்திரத்தில் திட்டமிட்டபடி குறித்தஇடத்தில வந்திறங்கிய அப்பலோ-14 வீரர்கள் அலன் பி ஷெப்பார்ட், ஸ்டுவர்ட் ரூஸா, எட்கார் மிச்சல் ஆகிய மூவரும் இப்பொழுது யு. எஸ். எஸ் நியு ஒலீன்ஸ் என்ற தமது மீட்புக்கப்பலில் ஓய்வெடுத்துக் கொள்ளுகிறார்கள்.**

**சந்திரப்பயணத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு திரும்பியுள்ள மூவரையும் பரிசோதித்த டாக்டர்கள் அவர்களின் உடல்நிலை மிகச்சிறப்பாக இருப்பதாக அறிவித்துள்ளனர்.**

வீரர்களையும், அவர்கள் கொண்டுவந்த சந்திர மாதிரிப் பொருட்களையும் நியுஓர்லியன்ஸ் கப்பல் இப்பொழுது ஹவாய்ப் பகுதியினருகில் ஹொனலுலு என்ற இடத்துக்கு எடுத்துச் செல்கின்றன. அங்கு சந்திர மாதிரிப் பொருட்களும், வீரர்களை பூமிக்கு திருப்பிக் கொண்டு வந்த கட்டளைக் கலமும் இறக்கப்பட்டு விமானம் மூலமாக ஹூஸ்டனுக்கு எடுத்துச் செல்லப்படும். அங்கு சந்திர மாதிரிப் பொருட்களை விஞ்ஞானிகள் ஆராய்ந்துவரும் அதே வேளையில் வீரர்கள் நோய்த் தடுப்பு முகாமில் இருந்து வருவார்கள்.

இன்று விடியற்காலை சரியாக 2.35 மணிக்கு அப்பலோ-14 வீரர்கள் தென் பசுபிக் சமுத்திரத்தில் ஸோமோவா தீவுக்கருகில் பத்திரமாக வந்திறங்கினார்கள். அதிகாலை 2.33 மணிக்கு வந்திறங்குவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. திட்டமிட்டதற்கு இரண்டு நிமிடங்கள் மட்டுமே தாமதமாகியுள்ளது.

பெப்ரவரி முதலாம் திகதி (இலங்கைநேரம்) 2.33 மணிக்கு அப்பலோ-14 கென்னடி முனையிலிருந்து புறப்பட்டது. காலநிலை சீராக இல்லாததால் விண் கப்பல் புறப்படுவதில் 40 நிமிடங்கள் தாமதமாயிற்று. ஆனால் பூமியின் ஈர்ப்புவிசையிலிருந்துவிடுபட்டு சந்திரனைநோக்கிப் போய்க் கொண்டிருந்த சமயத்தில் இந்த 40 நிமிடத்தில் பிந்திவிட்ட தூரத்தை அவர்கள் சரிசெய்து கொண்டார்கள். இதனால் திட்டமிட்டதற்கு 2 நிமிடங்கள் மட்டுமே அதிகமான நேரம் விண்ணில் அவர்கள் இருந்துள்ளார்கள்.

பூமியின் காற்று மண்டலத்துக்குள் நுழைவதற்கு முன் கலத்தின் வேகத்தை அவர்கள் அதிகரிக்கச் செய்து கட்டளைக் கலத்தை மாத்திரம்பிரித்துக்கொண்டு மின்னெலெனப் பாய்ந்த பொழுது கலம் தீப்பிழம்பாக மாறியது. இந்தக் கட்டத்தில் சுமார் மூன்று நிமிடங்கள் பூமியுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டு விட்டன. அதன் பின் கலத்தின் பரசூட்கள் விரிந்து மெதுவாக இறங்கி வருவது தெரிந்தது. கலம் சமுத்திரத்தில் வந்து இறங்கிய அதேசமயம் மீட்புக்காகக் காத்திருந்தஹெலிகொப்டர்களிலிருந்த சுழியோடிகள் குதித்து கலத்தையடைந்து அது மூழ்கவிடாமல் மிதப்புச் சாதனங்களைப் பொருத்தினார்கள். ஒரு சுழியோடி கலத்தின் கதவொன்றைத் திறந்தார். 9 நாள் 42 நிமிடங்களின் பின்னர் வீரர்கள் அப்பொழுதான் பூமியில் காற்றை மீண்டும் சுவாசிக்கலானார்கள். அது வரை கலத்தில் சேகரித்து வைக்கப்பட்டிருந்த காற்றையே அவர்கள் பயன்படுத்தி வந்தார்கள்.

சுழியோடியினால் கொடுக்கப்பட்ட விசேஷ உடைகளைப் போட்டுக்கொண்டதோடு முகமூடிகளையும் அவர்கள் அணிந்து கொண்டார்கள். சந்திரனிலிருந்து இவர்கள்மூலம் விஷக்கிருமிகள் வந்திருக்கலாம் என்ற காரணத்தினாலேயே இவர்களுக்கு இப்படியான புதிய உடை வழங்கப்பட்டது. அதற்கு முன்பே கலத்தின் மீது கிருமிநாசினி தெளிக்கப்பட்டது. பின்னர் வீரர்கள் ஹெலிகொப்டர் மூலமாக நியூஓலியன் கப்பலுக்கு கொண்டுபோகப் பட்டார்கள். கப்பலில் அவர்களுக்கு வெகு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. ஆனால் உடனடியாகவே அவர்கள் தமக்கென கப்பலில் ஒதுக்கப்பட்ட அறைக்குள் போய்விட்டார்கள். பூமிக்குத் திரும்பியதிலிருந்து 17 நாட்களுக்கு அவர்கள் தனித்து இருப்பார்கள்.

இவர்கள் கொண்டுவந்திருக்கும் சந்திர மண்மாதிரிகள் ஏறத்தாழ 150 றாத்தல் இருக்கும். ஏற்கனவே கொண்டு வரப்பட்ட மண்மாதிரிகளை விட இது அதிகம் என்பது போக சந்திரனைப் பற்றி இதுவரை வெளியாகாத பெரும் மர்மங்களை இவை மூலம் அறிய முடியும் என்று நம்பப்படுகின்றது.

அப்பலோ-14 இலங்கை நேரப்படி பெப்ரவரி 1 ம் திகதி 2-33 மணிக்கு பூமியிலிருந்து புறப்பட்டது. பெப்ரவரி 4-ம் திகதி தொடக்கம் 7-ம் திகதி வரை சந்திரச் சூழலிலிருந்தது. பெப்ரவரி 5-ம் திகதி சந்திரனில் நிலா வாகனம் இறங்கியது. அன்றும் மறுதினமும் வீரர்கள் சந்திரனில் இறங்கி செயலாற்றினார்கள். அன்றே சந்திரச் சுற்றாடலிலிருந்து விடுபட்டு பூமிநோக்கி புறப்பட்டன. பெப்ரவரி 10-ம் திகதி அதிகாலை பசுபிக் சமுத்திரத்தில் வந்திறங்கினார்கள்.

இந்தச் சந்திரப் பயணம் அனேகமாகத் திட்டமிட்டபடியே நடந்துள்ளது விஞ்ஞானிகளும் வீரர்களும் இதுகுறித்து மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்கிறார்கள். என்றாலும் சிக்கலான சந்தர்ப்பங்களும் ஏற்படாமலிருக்கவில்லை.

காலநிலை காரணமாக புறப்படுவதில் முதலில் தாமதம் ஏற்பட்டது. சந்திரப் பாதையில் நிலாவாகனத்துடன் தாய்க்கலம் இணைவதில் சங்கடம் ஏற்பட்டது. பின்னர் சந்திரத்தரையில் மிச்சலின் உடையில் சிறு ஓட்டை கண்டு பிராணவாயு அதிகமாக செலவாகியிருந்தது. சந்திரனிலுள்ள சிறு குன்று ஒன்றின் மீது ஏறும் முயற்சி கைவிடப்பட்டது. மற்றப்படி இவைதவிர வேறு ஒரு பிரச்னை எதுவும் பிரமாதமாக ஏற்படவில்லை. வேறுஒருகிரகத்துக்கு உயிருடன் மனிதர்கள் சென்று திரும்பும் மூன்றாவது திட்டம் வெற்றிகரமாக முடிந்துள்ளது. இது மனிதவர்க்கத்துக்கு கொண்டு வந்துள்ள பலாபலன்களை இனிமேல்தான் பார்க்க வேண்டும்.

### பாராட்டுதல்கள் குவிகின்றன

அப்பலோ-14 வீரர்கள் வெற்றிகரமாக சந்திர யாத்திரையை முடித்துக் கொண்டு திரும்பியிருப்பதைப் பாராட்டி அமெரிக்க அதிபர் செய்தியனுப்பியிருக்கிறார். வீரர்களையும் அவர்களின் குடும்பத்தாரையும் தம்முடன் விருந்துண்ணவும் அவர் அழைத்திருக்கின்றார்.

வீரர்களைப் பாராட்டி முதலில் வந்த செய்திகள் ஐ. நா. பொதுச் செயலாளர் யுதாண்டின் செய்தியும் ஒன்று.

பாகிஸ்தான் பிரச்னைகள் தீர

## மக்கள் கைக்கு ஆட்சிமாற வேண்டும்

### முஜிபு ரகுமான் வற்புறுத்துகிறார்

டாக்கா, பெப். 10

பாகிஸ்தானை எதிர்நோக்கியுள்ள கடும் பிரச்னைகள் யாவற்றையும் தீர்த்துக் கொள்வதற்கு விரைவில் மக்கள் ஆட்சி மலர வேண்டும் என்று அவாமி லீக்கின் தலைவர் ஷேக் முஜிபுர் ரகுமான் கருத்து வெளியிட்டிருக்கிறார்.


ஆட்சிப்பொறுப்பை மக்களிடம் மாற்றிக் கொடுக்கும் வகையில் அரசியல் திட்டம் ஒன்றினை உருவாக்குவதற்கு அரசியல் நிர்ணயசபைவிரைவில்கூடும் என்று ஷேக் நம்பிக்கை தெரிவித்தார்:

அண்மையில் பாகிஸ்தானில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஷேக் முஜிபுர் ரகுமானின் தலைமையிலான அவாமிலீக் பெரும்பான்மை வெற்றிபெற்றிருப்பதுஇங்கு குறிப்பிடத்தக்கது.

அண்மையில் இந்தியவிமானம் ஒன்று பாகிஸ்தானுக்குக் கடத்திச் செல்லப்பட்டது பற்றி ஷேக்கண்டனம் தெரிவித்திருப்பது தெரிந்ததே பொதுத் தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பைக் குழப்பி விடுவதற்காகவே இம்மாதிரிபிரச்னைகள் கிளப்பப்படுகின்றன என்ற விதத்தில் அவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

இதே சமயம்இந்தியவிமானம் கொழுத்தப்பட்டதற்கு நஷ்டஈடு தருவதோடு கடத்தல்காரர்களை இந்தியாவுக்குத் திருப்பியனுப்ப வேண்டும் என்று இந்திய அரசு மீண்டும் பாகிஸ்தானை வற்புறுத்தியிருக்கின்றது இதைச் செய்ய பாகிஸ்தான் மீறுமானால் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு அந்த நாடே பொறுப்பேற்க வேண்டும் என்று இந்தியா எச்சரித்திருக்கின்றது.

## அப்பலோ-11 இறங்கிய இடம்




சந்திரனில் முதன் முதல் காலடிவைத்த வீரர்களை எடுத்துச் சென்ற அப்பலோ—11 கலம் பசுபிக்சமுத்திரத்தில் வந்திறங்கியதை இப்படம் சித்தரிக்கின்றது. அப்பலோ—14 இறங்கிய விதமும் ஏறத்தாழ இதே மாதிரிதான் அமைந்தது.
1. கலம் திரும்பிவருகின்றது 2. காற்றுமண்டலத்துக்குள் கலம் நுழைகின்றது 3. தொடர்புகள் துண்டிப்புக்கட்டம் 5. கலம் இறங்கிய இடம் 7. மீட்புக்கப்பல் 8. ஹவாய்த்தீவு 9. ஹூஸ்டன்.

**மணிவாசகம்**

மலரிலிருந்து கனி வளர்ந்து வெளிப்பட்டதும் மலரின் இதழ்கள் தாமே கழன்று விடுதல்போல மனிதனிடத்து தெய்வீக இயல்பு அதிகரிக்கும் போது மனிதசுபாவத்திற்கு இயல்பான தோஷங்கள் தாமே மறைந்துவிடுகின்றன.

— பரமஹம்ஸர்.


# ஈழநாடு

Eeanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் தை மாதம் 29ந் திகதி (11-2-71)


## பன்னிரண்டு ஆண்டுகள்

பன்னிரண்டு ஆண்டுகள் முடிவடைந்து இன்று பதின்மூன்றாவது வயதில் காலடி எடுத்துவைக்கிறது உங்கள் 'ஈழநாடு'. பன்னிரண்டு ஆண்டுகள் என்பது தலைநகரிலே பல பல வசதிகளுடன் பல பத்திரிகைகள் வெளிவரும்போது இலங்கையில் சிறிதும் வசதியற்ற வடக்கு மாகாணத்திலிருந்து ஒரு பத்திரிகை வெளிவருவதென்றால் அது சாதாரண விஷயமல்ல மக்களின் அன்பும் அபிமானமும்தான் 'ஈழநாடு' இன்று இந்த அளவுக்கு வளர்ச்சி பெற்று வாய்ப்பும் வசதிகளும் நிறைந்த ஏனைய பத்திரிகைகளுக்குச் சிறிதும் சளைக்காமல் தனது பணியைச் சிறப்பாகச் செய்து வருவதற்குக் காரணமாகும். பதின்மூன்றாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் இந்த நன்னாளிலே தன்னை இதுவரை ஆதரித்து வளர்த்து வரும் பல்லாயிரக்கணக்கான அன்பர்களுக்கு தனது உளங்கனிந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றது.

1959-ம் ஆண்டு பெப்ரவரி 11-ல் வெளியான 'ஈழநாடு' முதலாவது இதழில் 'ஈழநாடு' நிர்வாகிகள் சார்பில் திரு. க. சி. தம்கரசா எழுதிய கட்டுரையில், "ஈழநாடு இலங்கையின்வரலாற்றில் மிகமிக முக்கியமானதொரு கட்டத்திலே தோன்றியுள்ளது. சிக்கல்கள் நிறைந்துள்ள இன்றைய நிலையில் எதிர்காலத்தை நோக்கிச் செல்லவேண்டுமெனத் தெரியாது தமிழ்பேசும் மக்கள் திகைத்து நிற்கின்றனர். இவ்வேளையில் உண்மை தெய்வீகமானது; கருத்துரைகள் கட்டுப்பாடற்றவை என்ற பத்திரிகாதர்மத்தை இலக்காகக் கொண்டு உள்ளதை உள்ளவாறு எடுத்துரைக்கவும், கருத்துரைகளைப் பரிமாறிக்கொள்ளவும் 'ஈழநாடு' உதயமாகியுள்ளது" என்று குறிப்பிட்டிருந்தார்.

1959-ம் ஆண்டிலிருந்ததைவிட இலங்கையின் வரலாற்றையே மாற்றியமைக்கும் பணியில் அரசு ஈடுபட்டிருக்கும் இன்றைய காலகட்டம் தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் மிக மிகச் சிக்கலானதாகும். இச்சமயத்தில் 'ஈழநாடு' தனது கடமையில் தவறவில்லையென்பதை வாசக நேயர்கள் அறிவர். தொடர்ந்தும் தனது பணியைச் செவ்வனே செய்துவருமென்பதையும் உறுதியுடன் கூறிக்கொள்ளுகிறோம்.

உடனுக்குடன் செய்திகளை வெளியிடுவது மட்டுமன்றி தமிழரின் உள்ளக் கருத்துக்களை உள்ளபடி தெரிவிப்பதுடன் தமிழ்க்கலைகளையும் இலக்கியங்களையும் இலக்கியகர்த்தாக்களையும் வளர்ப்பதில் 'ஈழநாடு' ஆற்றிவரும் பணியை நாம் சொல்லித்தான் தெரியவைக்கவேண்டுமென்ற அவசியமில்லை.

'ஈழநாடு' உங்கள் பத்திரிகை. பன்னிரண்டு ஆண்டுகளுக்குள் மதிப்புவாய்ந்த கணணியமிக்க ஒரு நல்ல பத்திரிகையென்று பல்லாராலும் போற்றப்படும் பாக்கியம் பெற்றுள்ள ஈழநாடு" தனது பணியை விருப்பு வெறுப்புகளின்றி தமிழரின் மேலான நன்மைக்கான முறையில் செய்ய இறையருள் தக்க வாய்ப்பளிக்குமென்று நம்புகிறோம்.

**ஆசிரியர்கள்**

## தீவின் எப்பகுதியிலும் கடமையாற்ற வேண்டும்

யாழ்ப்பாணம், வியா

"இத் தீவின் எந்தப் பகுதியிலென்றாலும் நமது கடமைகளை உணர்ந்து கடமையாற்ற ஆயத்தமாயிருக்க வேண்டும்"

உயர்தர பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்க கிளிநொச்சி உபகிளையின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரையாற்றிய வடமாகாணக் கிளைச் செயலளர் திரு எம் ஜி. நடராசா மேற்கண்டவாறு கூறினார்

திரு ஜி ஜே சபாநாதன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் திரு. நடராஜா பேசும் பேசுகையில் கூறியதாவது:

உயர்தர பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்கம் நிறுவப்பட்டதே ஆசிரியர்களின் தொழில் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடனேயாகும் ஒற்றுமையாக உறுதியாக உண்மையுடன் செயல்பட அங்கத்தவராகிய நாம உறுதியாக உழைப்போமாயின் கல்விப் பீடம் எம்மையணடி வரும்.

தலைமைதாங்கிய திரு. சபாநதன் பேசுகையில், தொழிற்சங்க அவசியத்தைப் பற்றியும் அங்கத்தவர்களின் கடமைகள் பற்றியும் விளக்கி கூறினர்.

மேற்படி உபகிளையின் உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் திரு ஜி ஜே சபாநாதன் உபதலைவர் ஜனப் எம் சாலீம், செயலாளர் செல்வி என் முத்துத்தம்பி.

.....

## இந்தியதேர்தல் எதிர்க்கட்சி றிட் மனு

புதுடில்லி ஜன. 10

இந்திய தேர்தலில் ஆளும் கட்சியினர் தமது செல்வாக்கைப் பயன்படுத்தக் கூடாதென்று கோரும் றிட் மனுவொன்றை 5 எதிர்க் கட்சியினர் இன்று தாக்கல் செய்துள்ளனர்

சம்யுக்த சோஷலிஸ்ட் நிஜலிங்கப்பா தலைமைக் காங்கிரஸ், சுதந்திரா ஜனசங் ஆகிய கட்சியினர் இந்த றிட் மனுவை தாக்கல் செய்துள்ளனர்

இம் மனுவில் இடைக்காலத் தடையுத்தரவையும் கோரியுள்ளனர்

# இந்திய தேசிய காங்கிரஸின் தோற்றமும் நிலையும்

**இந்தியாவின் விடுதலைக்கும் வளர்ச்சிக்கும் அயராதுழைத்த காங்கிரஸுக்குள் இன்று கருத்துவேற்றுமை காரணமாக பிளவு ஏற்பட்டுள்ளது. இதனால் காங்கிரஸ் இரு பிரிவாகி இரண்டும் எதிர்வரும் தேர்தலில் எதிர்த்துப் போட்டியிடுகின்றன. இத்தகைய தொரு சூழலில் ஸ்திரமாக விளங்கிய இந் நிறுவனத்தின் வரலாற்றை அறிந்துகொள்வது நல்லது. இந்திய காங்கிரஸை உருவாக்கியவர் யார்? இந்தியரா? அல்லது வெளிநாட்டவரா? என்பன போன்ற கேள்விகளுக்கு இக்கட்டுரை விடை தருகிறது:**

பாரதத்தின் விடுதலைக்காக அன்று போராடிப் பின்னர் அதனைப் பல்வேறு துறைகளில் முன்னேற்றுவதற்காவும் பாடுபட்டுக் கொண்டிருந்தது இந்திய தேசிய காங்கிரஸ். பாரத நாட்டின் ஸ்திரமானதொரு நிறுவனமான இது இன்று அதன் தலைவர்களிடையே ஏற்பட்ட போட்டாபோட்டி மனப்பான்மையாலும் பதவி மோகத்தாலும், சுயநல நோக்காலும் பிளவுபட்டு இருவேறு பிரிவுகளாகியுள்ளது. இந்தப் பிளவு இந்திய தேசிய காங்கிரஸின் வரலாற்றையறிந்த யாவருக்கும் வருத்தத்தைக் கொடுப்பதொன்றாகும்.

### கோகலேயின் கருத்து

1885-ம் ஆண்டு அது ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் இந்தியாவின் நலனுக்காகவே உழைத்துவந்த இந்திய தேசிய காங்கிரஸை ஆரம்பித்தவர் யார்? இந்தியரா? மேல் நாட்டவரா? என்ற வினாக்கள் இந்திய தேசிய காங்கிரஸின் ஆதி வரலாறு குறித்து ஆராய்பவர்களின் மனதில் முதற்கண் எழும் வினாக்களாகும். கோபாலகிருஷ்ண கோகலே இந்தியாவின் தலைசிறந்த அரசியல் மேதை இந்திய தேசிய காங்கிரஸை இந்தியர் எவரும் ஆரம்பித்திருக்க இயலாது என்பது அவரது முடிவாகும். இக்காங்கிரஸின் ஆதி வரலாற்றை ஆராயுமிடத்து இம்மேதையின் கருத்து உண்மை என்றே தோன்றுகிறது. இந்திய காங்கிரஸ் உருவாவதற்கு முன்னர் இந்தியாவில் அரசியல்சார்புகொண்ட பல சங்கங்கள் இருந்தன. பூனா சர்வஜனிகசபை, சென்னை மகாஜனசபை, கல்கத்தா பிரிட்டிஷ் இந்திய சங்கம், பம்பாய் கிழக்கிந்திய சங்கம் ஆகியன இவற்றுள் செல்வாக்குள்ளனவாக இருந்தன. தலைநகரங்களில் இவ்வாறு பல்வேறு சங்கங்கள் இருந்தபோதும் இவை யாவற்றையும் ஒன்றுபடுத்தி அகில இந்திய ரீதியில் இயங்கும் ஒரு நிறுவனம் இல்லாதிருந்தமை பெரும் குறையாகவே பாரதத்திற்கு நீண்டகாலமாகவிருந்தது.

டாக்டர் பட்டாபி சீதாராமய்யா காங்கிரஸ் ஸ்தாபனம் குறித்து வரலாறு எழுதியவர். இவ்வறிஞர் காங்கிரஸைப் பற்றிக் கூறுகையில் இந்தநிறுவனத்தை அமைக்கவேண்டுமென்ற நோக்கம் யாரிடத்தில் முதற் தோன்றியது என்பது மர்மமாகவேயிருக்கிறது என அவ்வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார். இவ்வகில இந்திய நிறுவனத்தின் ஆரம்பம் குறித்து பலரிடையே பல தரப்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. 1877-ம் ஆண்டு மாபெரும் டில்லிதர்பார் நடைபெற்றது இந்த டில்லி தர்பாரே காங்கிரஸ் நிறுவனத்துக்கு அத்திவாரம் இட்டது. இதுவே வங்காளத் தலைவர்களின் சிந்தையில் அகில இந்திய நிறுவனம் ஒன்று உருவாகவேண்டும் எனும் எண்ணத்தை உருவாக்கியது என்பது ஒரு சிலரது கருத்து. கல்கத்தாவில் அப்பொழுது நடைபெற்ற சர்வதேச பொருட்காட்சியே இந்நிறுவனத்துக்கு முன்னோடி என்பது இன்னொரு சாராரின் கொள்கை. 1884-ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற பிரம்மஞான சபை மகாநாடே இந்தேசிய காங்கிரஸ் உருவாவதற்கு ஏதுவானது என்பது திருமதி அன்னி பெசன்ட் அம்மையாரின் கருத்து. கல்கத்தாவில் 1883-ம் ஆண்டு அரசியல் பேரறிஞர் ஆனந்தமோகன் போஸ் தலைமையில் நடந்த முதலாவது தேசிய மகாநாடே இக்காங்கிரஸுக்கு அடிகோலியது என்பது ஒரு சிலரது கருத்து

இவ்வாறு இவர்கள் கூறினும், மேற்கண்டவாறு பல பிரிவுகளாகவிருந்த இயக்கங்களை ஒருமுகப்படுத்தி அகில இந்திய தேசிய காங்கிரஸ் என்ற பெயரில் அமைத்த பெருமை ஆலன் அக்டேவின் ஹியூம் என்ற ஆங்கிலேயரையே சாரும்.

### காங்கிரஸின் சிற்பி ஹியூம்

ஹியூம் இந்திய அரசாங்கத்தின் காரியதரிசியாகப் பணிபுரிந்தவர். பொறுப்பு வாய்ந்த பதவியை வகித்த ஹியூம் அன்று இந்தியா எங்கும் நிலவிய அரசியல் நிலைமை குறித்து உளவு வேலைகளை அறிந்து அவ்வளவு வேலைகள் பற்றிய அறிக்கைகளை ஆராயவேண்டியிருந்தது. இந்தக் காலத்தில் லிண்டன் பிரபு ராஜப் பிரதிநிதியாகக் கடமையாற்றினர். இந்தவேளையில் இந்தியாவில் புரட்சி எந்நேரமும் ஏற்படத்தக்க நிலைமை உருவாகிக்கொண்டிருந்ததைக் ஹியூம் அறிந்திருந்தார் உளவுகாரர்கள் அனுப்பியஆயிரக்கணக்கான உளவு பற்றிய அறிக்கைகளைப் படிக்கும் பொறுப்பு இவருக்கு ஏற்பட்டது இவைகளைப் படித்ததினால் இந்தியவில் கலக நிலைமை குமுறிக்கொண்டிருக்கிறது என்பதையும் பட்டினி கிடக்கும் பாட்டாளி மக்களே கலகத்தை ஏற்படுத்துவார்கள் என்பதையும் அவர் அறிந்தார். இதை மட்டுமன்றி மக்கள் சட்டத்தை மீற படித்த ஒருசிலர் தலைவர்களாவார்கள் என்ற விடயங்களை உளவறிக்கைகளின் வாயிலாக ஹியூம் அறிந்தார் இத்தகையதொரு கொந்தளிப்பு நிலைமையைக்கண்ட சில மதத் தலைவர்கள் ஹியூமை அணுகினர் இந்திய அரசியலிலும் மக்களிடையேயும் மிகுந்த செல்வாக்குள்ள அவர் மக்களது மனக்கசப்பை நீக்கி உருவாகவிருக்கும் குழப்ப நிலையைத் தவிர்க்க ஆவன செய்ய வேண்டுமெனக் கோரினர்,

### இந்திய தேசிய யூனியன்

இந்தக் காலத்தில் ரிப்பன் பிரபு ராஜப் பிரதிநிதியாகப் பதவியேற்றார். ரிப்பன் பிரபு இந்திய மக்களுக்குச் சாதகமான மன நிலையைக் கொண்டவர் ஆதலால் இந்திய அரசியலில் அவ்வேளையில் அமைதி நிலவியது. ஹியூம் இவ்வேளையில் அதாவது தான் பதவியில் இருக்கும் பொழுது இந்தியப் பிரச்னைகளில் ஈடுபடுவது நியாயமான தொன்றல்ல ஆதலால் ஓய்வு பெறும்வரை இந்தியப் பிரச்னைகளில் தலையிடுவதில்லை என பொறுத்திருந்தார்.

1882-ம் ஆண்டு ஹியூம் தனது பதவியில் இருந்து ஓய்வுபெற்றார். ஓய்வு பெற்றதும் இந்தியாவை வளர்ச்சியடையச் செய்ய வேண்டும் என்ற தனது லட்சியத்துக்காக உழைக்கச் சித்தம் கொண்டார். தனது நோக்கத்தைச் செயல்படுத்தும் அறிவும் ஆற்றலும் ஒருங்கே கைவரப்பெற்ற ஹியூம் தனது திட்டத்தைச் செயல்படுத்த பல்கலைக்கழக மாணவரின் உதவியைநாடவிழைந்தார். 1883-ம் ஆண்டில் கல்கத்தா பல்கலைக்கழக மாணவருக்கு ஹியூம் ஒரு அறிக்கைவிட்டார். பட்டதாரி மாணவர்களுக்கு அனுப்பிய இவ்வறிக்கையில் 'மனோதத்துவ, தார்மீக சமுதாய, அரசியல், புத்துயிர்ப்பு ஏற்படுவதை லட்சியமாகக் கொண்ட தொரு சங்கத்தை நீங்கள் அமைக்கவேண்டும் எனக் கோரியிருந்தார். ஹியூமின் இந்தக் கோரிக்கையைப்

## குணம்

பல்கலைக்கழக மாணவர்கள் பெருவிருப்போடு ஏற்றுக் கொண்டனர். அவர் விரும்பியதைச் செய்யத் திடசங்கற்பம் செய்துகொண்டனர். இவர்கள் இருசாராரது முயற்சியாலும் 'இந்திய தேசிய யூனியன்' உருவாகியது. இந்த யூனியன் அரசியல் சார்பற்றதாக இருக்க வேண்டும், இந்திய சமுதாய வளர்ச்சிக்காகவே உழைக்க வேண்டும் என்பது ஹியூமின் விருப்பமாகும். ஆனால் அவரது இந்த விருப்பம் நிறைவேற வேறு முட்டுக்கட்டைகள் ஏற்பட்டன. தேசிய யூனியன் உருவாகிய இவ்வேளையில் பிரித்தானிய குற்றவாளிகளை இந்திய நீதிபதிகள் விசாரணை செய்து தண்டிக்கக்கூடாது எனக் கொண்டுவரப்பட்ட இல்பர்ட் மசோதா அமைதி நிலவிய நாட்டில் மீண்டும் குழப்ப நிலையையுருவாக்கிவிட்டது. இதனால் இந்த யூனியன் அரசியல சார்பற்றதாகவிருக்க வேண்டும் என்ற ஹியூமின் நோக்கமும் தளர்ச்சியடைந்தது.

### காங்கிரஸ் தோன்ற உதவிய ஆங்கில பிரதிநிதி

இந்தக் காலத்தில் டஃபெரின் பிரபு இந்தியாவின் ராஜப்பிரதிநிதியாகப் பதவியேற்றார் இவர் அப்போது நிலவிய இந்தியப் பிரச்னைகளுக்கான காரணங்களைப் பற்றி ஆராய்ந்தார். இந்தியாவில் நிலவிய பிரச்னைகளுக்கெல்லாம் காரணம் இங்கிலாந்து அரசியல் அமைப்பில் உள்ளது போன்றஎதிர்கட்சியொன்று இந்திய அரசியலில் இல்லாமையே காரணம் என்ப தைக் கண்டுபிடித்தார். இக் குறையைத் தீர்க்க வேண்டுமெனத் தீர்மானித் தார். டஃபெரின் பிரபு குறையைத் தீர்க்க அப் பொழுது நாட்டின் சீர்திருத் தத்தில் முழுமூச்சாக ஈடு பட்டிருந்த ஹியூமே தகு தவர் எனக் கண்டுபிடித் தார். உடனே அவரை அழைத்து சீர்திருத்தக் கருத் துக்களால் மட்டும் அவரது திட்டம் பயனளிக்காது என வும் இங்கிலாந்தில் எதிர்க் கட்சியினர் புரியும் பணி யைப் புரிய இங்கும் இந்தி யரைக்கொண்ட ஓர் எதிர்க் கட்சி உருவாக வேண்டுப் என ஆலோசனை கூறினா இந்த எதிர்க் கட் சியால் நாட்டின் பிரச்னை களுக்குத் தீர்வு காணலாப் எனவும் பிரபு அறிவுறுத்தி னர் இத்துடன் இந்திய அர சியல் தலைவர்கள் நாட்டின் நலனுக்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பதை யும் எடுத்து விளக்கினா டஃபெரின் பிரபு

இதுமட்டுமன்றி யூனியன் கூட்டங்களுக்குயூனியன்களி னர்களைத் தலைமைதாங் அனுமதிக்கக்கூடாது ஏனெ னில் மக்கள் கவர்னர் முன் னிலையில் தங்கள் சாதகபாதகமான கருத்துக் களை எடுத்துக்கூறத் தயங்கு வர் என ஹியூமுக்குமேலும் அறிவுரை வழங்கிய பிரபு தான் வழங்கிய மேற்படி அறிவுரைகள் யாவற்றையும் பற்றிதான் இந்தியாவி கடமையாற்றும் காலம் வரை எவருக்கும் தெரிவிக் கக்கூடாது எனவும் ஹியூ மிடம் வலியுறுத்திக் கூறின டஃபெரின் பிரபுவின் அ வுரைகளைச் செவிமடுத் பின்னர் ஹியூம் தனது திட் டத்தை மாற்றியமைக் வேண்டியதாயிற்று எனவே இரு திட்டங்களை வகுத் தார். முதலாவதுதிட்டம் எதிர்க் கட்சிஒன்றையமைப் பது. இரண்டாவது திட்டம் தனது சமூகசீர் திருத்த சங்கம் அமைக்கும் திட்டம் இவ்விரு திட்டங்களையும் ஹியூம் இந்தியத் தலைவர் களிடம் பரவலாக எடுத்து விளக்கினார். அரசியலை அடி படையாகக் கொண்ட திட் டம் மக்களிடையே பெரு ஆதரவைப் பெற்றது.

இந்தியாவெங்கும் ஹியூம் தனது திட்டத்தைப் பிர சாரம் செய்தார். ஆனா ஆதரவு பெறுவது கஷ்ட மான காரியமாகவேயிருந் தது. இவரது முயற்சி பற்றி சுவாமி சிரத்தானந்தர் தனது குறிப்புகளில் பின்வரு மாறு குறிப்பிட்டுள்ளார்: பெயரிடப்படாதிருந்த கா கிரசிற்கு ஆதரவு தேடும் பொருட்டு ஹியூம் லாஹூர் சென்றார். 'விணமணி' எ துண்டுப் பிரசுரமொன்றை யும் வெளியிட்டார் எவ் வாறு முயற்சியெடுத்துப் பலன் ஏற்படவில்லை பல தங்களுக்கு ஓய்வில்லையென் றனர் சிலர் தங்கள் ஆத ரவை வாபஸ் பெற்றனர். இந்த நிலையில் சற்றேமனம் தளர்ந்த ஹியூம் இங்கிலாந்து சென்று அங்குள்ள அரசியல் வாதிகளின் ஆதரவைப்பெற் றார். அவர்களது ஆதரவைப் பெற்று இந்திய விவகார களில் அக்கறையும் ஆவலு கொண்ட இந்திய பார மன்டரி கமிட்டி யொன்றை நிறுவினார் இந்தக் கமிட் டியை நிறுவிய பின்ன ஹியூம் இந்தியா திரும்பி னார்.

# ‘அரசாங்கத்துடன்சேரஜி.ஜி. ஆட்சேபிக்கமாட்டார்’ வட்டுக்கோட்டை எம். பி. தியாகராசா நம்பிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

“ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் தமிழ்க்காங்கிரஸ் நான்காவது கட்சியாகச் சேர்வதற்கான விண்ணப்பத்தை அரசாங்கக் கொறடாவுக்கு அனுப்புவதற்குத் தமிழ்க்காங்கிரஸ் ஆட்சிமன்றக் குழு முடிவு செய்துள்ளது. இது சம்பந்தமான வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அரசாங்கத்தில் சேருவதற்குத் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் எவ்வித ஆட்சேபமும் தெரிவிக்கமாட்டார் என்ற நம்பிக்கையும் எமக்குண்டு.”

வட்டுக்கோட்டை எம். பி. திரு ஏ. தியாகராசா நமது நிருபரிடம் நேற்று மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு தியாகராசா மேலும் கூறியதாவது: “அரசாங்கத்துடன் ஒத்துழைத்துத்தான் உரிமைகளைப் பெறமுடியும் என்பது தமிழ்க்காங்கிரஸ் கடைப்பிடித்துவந்த கொள்கையாகும். தமிழ்க்காங்கிரஸ் தலைவர்கூட அரசாங்கத்துடன் சேர்ந்துதான் உரிமைகளைப் பெறமுடியும்; எதிர்த்துப் பெறமுடியாது என்பதைச் சொல்லில் மட்டுமன்றிச் செயலிலும் வலியுறுத்திக் காட்டிவந்துள்ளார்.

1962ம் ஆண்டு நடந்த சத்தியாக்கிரகத்தில் தமிழ்க்காங்கிரஸ் பங்குபற்றுவதென தீர்மானித்ததோடு, தமிழ்க்காங்கிரஸ் தலைவரும் பங்குகொள்ளவில்லை. தமிழ்க்காங்கிரஸைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் சத்தியாக்கிரகத்தில் தனிப்பட்ட முறையில் கலந்துகொண்டனரே தவிர கட்சிரீதியில் கலந்துகொள்ளவில்லை. போராட்டத்தின் மூலம் நல்லெண்ணத்தைச் சீர்குலைத்து இரு இனத்தவர்களுக்குமிடையில் பகைமையை வளர்த்து, நிலைமையை மேலும் சிக்கலாக்கலாமே தவிர, உரிமைகளையும் பெறமுடியாதென்பது கடந்த காலத்தில் தெரிந்த விஷயமாகும்.

நாங்கள் அரசாங்கத்தில் இருந்தாலும் தமிழ்க்கட்சிகளின் 9 அம்ச திட்டத்தை ஆதரிக்கத் தயங்கமாட்டோம். தமிழனுக்கு நன்மை கிடைக்குமானால் அதனை ஏன் எதிர்க்கப்போகிறோம்? உரிமைகளை, ஒத்துழைத்துப் பெறலாமே தவிர, எதிர்த்துக்கொண்டு பெறமுடியாதென்பதைக் கூறவிரும்புகிறேன். 9 அம்சங்களை மட்டுமல்ல, அதிலும் பார்க்கக் கூடிய உரிமைகளைக் கேட்டாலும் நாங்கள் ஆதரிக்கத் தயங்கமாட்டோம். தற்பொழுதுள்ள அடிப்படைத் தீர்மானங்களில் தமிழருக்கு எவ்வளவோ நன்மைகள் உண்டு. இவ்விஷயமாகத் தமிழ்க்காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்தபோது, தேசிய அரசாங்கம், உத்தியோக மொழிச் சட்டத்தை அமுல் செய்யாமல் இருந்ததெனப் பொதுச் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

தேசிய அரசாங்கத்தில் இரு தமிழ்க் கட்சிகளும் சேர்ந்திருந்து பெற்றுத்தந்த உரிமைகள் எதுவும் கிடையாது. தமிழ் எம் பிக்கள் தேசிய அரசாங்கத்துடன் சேர்ந்து தங்கள் ஆதரவாளர்களுக்கு உத்தியோகங்களும், இடமாற்றங்களும் பெற்றதோடு, தங்கள் தொகுதிகளையும் அபிவிருத்தி செய்தார்களேயொழிய எந்த உரிமைகளையும் பெறவில்லை. வடபகுதியில் ஒரு சிறு தொழிற்சாலையைக்கூட நிறுவ முயற்சிக்கவில்லை. தேசிய அரசாங்கத்தின் காலத்தில் தென்பகுதியில் எத்தனையோ தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் வடபகுதியில் ஒன்றுகூட ஆரம்பிக்கப்படவில்லை. தேசிய அரசாங்கம் தமிழ்ப் பகுதியில் பல்கலைக்கழகம் நிறுவுவதையும் தட்டிக்கழித்துவந்தது. தமிழருக்கு இன்னும் எத்தனையோ தீமைகள் செய்துவந்தது. அப்படியிருந்தும் இரு கட்சிகளும் அரசாங்கத்தை ஆதரித்துவந்தன.

நாங்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் சேருவது, எங்கள் ஆதரவாளர்களுக்கு உத்தியோகம் பெறுவதற்கோ, எங்கள் தொகுதிகளை அபிவிருத்திசெய்வதற்காகவோ அல்ல. இந்த அரசாங்கம் தமிழ் மக்களுக்குப் பல நன்மைகள் செய்யவிருக்கிறது. அரசாங்கத்துடன் சேர்ந்து அத்திட்டங்களை நிறைவேற்றவே சேருகிறோம். வடபகுதியில் பல்கலைக்கழகம் நிறுவவும், பனம்பொருள் ஆராய்ச்சி நிலையம் அமைக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. கண்ணாடித் தொழிற்சாலை உட்பட 3 தொழிற்சாலைகள் இங்கு நிறுவப்படவிருக்கின்றன. தேசிய அரசாங்கத்தால் கிடைக்காத பலவற்றை இந்த அரசாங்கம் செய்ய முன்வந்துள்ளது. ஆதலால் அரசாங்கத்தில் சேர முடிவு செய்துவிட்டோம்.”

## தேசியகாங்கிரஸின் முதலாவது மகாநாடு

இந்தியா திரும்பியவுடன் ஹ்யூம் தனது அலுவல்கள் முடிந்துவிட்டதாகக் கருதி வாழாவிருக்கவில்லை. இந்தியாவிலுள்ள விரவாதிகளை தவிர்த்து மிதவாதிகளையணுகினார். அவர்களோடு ஆலோசனை நடாத்தி 1885ம் ஆண்டு மார்ச் மாதம் கூட்டம் ஒன்றைக் கூட்டுவதற்கான சுற்றுநிருபம் ஒன் தயாரித்து அங்கத்தவர்களுக்கு அனுப்பினார். இக்கூட்டம் கூட்டுவதற்குச் சில தினங்களுக்கு முன்னரே ‘காங்கிரஸ்’ என்ற பெயர் பிரஸ்தாபிக்கப்பட்டது. 1885ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ம் திகதியில் இருந்து 31ம் திகதி வரை பூனாவில் இந்தியதேசிய யூனியன் மகாநாடு நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. ஆனால் பூனாவில் நோய் பரவிய காரணத்தால் குறிப்பிட்டபடி அங்கு மகாநாடு நடத்தமுடியவில்லை. எனவே பம்பாயில நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானத்தின் மூலம் 1885 ஆம் ஆண்டு டிசம்பர் 28-ம் திகதி உரமேசசந்திர பானர்ஜி தலைமையில் மகாநாடு பம்பாயில் நடைபெற்றது. இம்மகாநாட்டில் 72 பிரதிநிதிகள் கலந்துகொண்டு வாதப்பிரதிவாதங்கள் நடத்தினர். இதுவே இந்தியதேசிய காங்கிரஸின் மகாநாடாகும். ஹ்யூமின் விடாமுயற்சியால் அகில இந்தியரீதியில் ஒரு நிறுவனம் ஒன்று உருவாக வேண்டும் என்ற இந்தியாவின் குறை நீங்கியது. அவரின் இந்த முயற்சிக்கு டவ்பரின்பிரபுவின் ஆலோசனைகளும் இந்தியத் தலைவர்கள் பலரின் ஒத்துழைப்பும் துணையாக நின்று உதவின.

# நல்லூர் எம். பி.க்குமனக்குழப்பம் என்கிறார் உடுவில் எம். பி.!

யாழ்ப்பாணம், வியாழன்

நீதிமன்ற மொழிச்சட்டத்தைத் திருத்தவேண்டுமென்ற உடன்பாட்டுடன்தான் ஐக்கியதேசியக்கட்சியுடன் சேர்ந்தோம். உடன்பாட்டில் இது ஒரு அம்சமாக இருந்தது. ஆனால் ஐக்கிய தேசியக்கட்சி இந்தச் சட்டத்தைத் திருத்தாததற்குப் பலகாரணங்களுண்டு. இன்று நல்லூர் எம் பி திரு அருளம்பலம் ஆதரிக்கிற கூட்டு முன்னணிக் கட்சிகளின் பிரசாரமே இது நிறைவேறாமற்போனதற்குக் ஒரு முக்கிய காரணம். திரு டட்லி சேனநாயகா செல்வநாயகத்துக்கு சிங்கள மக்களை விற்றுவிட்டார்கள் என்று அப்போது கூட்டுமுன்னணிக் கட்சிகள் பிரச்சாரம் செய்தன. இது அருளம்பலத்துக்குத் தெரியாமல் இருக்கமுடியாது. இதுமட்டுமல்ல, சென்ற ஆண்டு சிம்மாசனப் பிரசங்கத்தில் நீதிமன்ற மொழிச்சட்டத்தைத் திருத்தவேண்டுமென்று நாங்கள் கொண்டுவந்த திருத்தப் பிரேரணையை திரு அருளம்பலம் ஆதரித்ததையும் இவ்வளவு விரைவாக மறந்துவிட்டது ஆச்சரியத்துக்குமேல் ஆச்சரியமாகவுள்ளது. நீதிமன்ற மொழிச்சட்டத்தைத் திருத்த அப்பொழுதிலிருந்தே எல்லாமுயற்சிகளும்செய்தே வந்துள்ளோம். தமிழ்காங்கிரஸும் இதனை ஆதரித்து வந்துள்ளது. ஆனால் அருளம்பலத்துக்கு ஏனோ இந்த மனக்குழப்பம்?’

இவ்வாறு நீதிமன்ற மொழிச்சட்டம்பற்றி நல்லூர் எம் பி திரு அருளம்பலம் விடுத்த அறிக்கைக்கு தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த உடுவில் எம் பி திரு வி தர்மலிங்கம் மேற்கண்டவாறு பதில் அளித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசியல் திட்டத்துக்கான அடிப்படைத் தீர்மானங்கள் பற்றி ஆட்சிமன்றத்தில் ஒரு வார்த்தையும் பேசவில்லை என்கிறார் திரு அருளம்பலம். அடிப்படைத் தீர்மானங்கள் பற்றிப் பேசுவது ஆட்சிமன்றத்திலல்ல. அரசியல் நிர்ணயசபையில் என்பது அருளம்பலத்துக்குத் தெரியாதா? அரசியல் நிர்ணயசபையில் இப்பிரச்னை வரும்போது பேசுவோம்.

அருளம்பலம் அவர்கள் நீதிமன்ற மொழிபற்றியும் போதனா மொழிச் சட்டத்தைப் பற்றியும் தேர்தல் காலத்தில் மக்களுக்குக் கூறிய கருத்தும் இப்போது வைத்துள் கருத்தும் ஒன்றானால் வல்வெட்டித்துறையில் எடுத்த ஒற்றுமை தீர்மானத்தை நிச்சயம் ஆதரிப்பார்.

தமிழர்களுக்குக் கிடைக்கின்ற உரிமைகளை எதிர்க்கமாட்டோம் என்று கூறுகிறார் திரு அருளம்பலம் அப்படியானால் தமிழர்களுக்கு உரிமை தர வேண்டுமென்று ஏன் கேட்கத் தயங்குகிறார். கேட்காமலேயே உரிமை கிடைக்குமென்று அவர் கனவு காண்கிறாரா? சிங்கள மக்களின் நல்லெண்ணத்தையே நாமும் விரும்புகிறோம். ஆனால் மானத்தையும் உரிமையையும் அடகுவைத்து இந்த நல்லெண்ணத்தைப் பெற நாம் தயாரில்லை. — —

அம்பன், புதன்

குடத்தனைக்கிராம சபையின் மாதாந்தக்கூட்டத்திற்கு தலைவர், உபதலைவர், உறுப்பினர் ஒருவருடன் மூவரே சமூகமளித்தபடியால் போதியகோரமின்றி கூட்டம் நடைபெறுததுடன் காலவரையறையின்றி ஒத்திபோடப்பட்டுள்ளது.

# ஜெயராஜன் எழுதுவது:

ஒரு பெரியவர் சுமார் 70 வயதிருக்கும் கொழும்பு பம்பலப்பிட்டி கினுபர் பிளேஸ் 6-ம் நம்பர் மாளிகையில் நடைபெற்று வரும் தற்கால ஈழத்து தமிழ் நூல் காட்சியில் பல நூல்களையும் எடுத்து எடுத்து மிக கவனமாகப் படித்து வந்தார். புத்தக அட்டவணை அடங்கிய பட்டியலை ஒரு ரூபாய் விலை கொடுத்து வாங்கினார். ஒவ்வொரு நாளும் காட்சிக்கு வந்து புத்தகங்களைப் படித்தார்.

அவரை யார் என்று அறிய மிக ஆவலாக இருந்தது. ‘வணக்கம்’ என்று கூறி தமிழில் பேசினேன். அவரும் ‘வணக்கம்’ சொல்லி தமிழிலேயே பதிலளித்தார். தமிழ் சிறிது கொச்சியாக இருந்தது. சிறிது நேரத்துக்குப் பின் பெயரைக் கேட்டேன் ‘சிறிசேன’ என்றார். இக்காலத்தில் ஒருவர் சிங்களவரா? தமிழரா! என்று தோற்றத்திலிருந்தோ உடையிலிருந்தோ அறிய முடியாது. ஆணும் அப்படித்தான் பெண்களும் கூட அப்படியே. அந்த அன்பர் காற்சட்டை அணிந்திருந்தார். தமிழ் நூல்களை அவ்வளவு கவனமாகப் படித்ததால் அவர்தமிழராகத்தான் இருக்குமென்று நினைத்தேன் பெயரைக் கேட்ட காரணம் தமிழரா? சிங்களவரா? என்பதை அறியத்தான். பெயரிலிருந்துதானே இதை ஓரளவு அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது! பெயர் கூட ஒரு பொதுமை ஏற்பட்டு வருவதைக் காண்கிறோம்

சிங்களவராயிருந்தும் தமிழில் இவ்வளவு ஊக்கம் காட்டுவதைக்கண்டு வியப்படைந்து மேலும் அவரைப் பற்றி அறிய ஆவல் கொண்டேன். ஸ்ரீசிறிசேன அவர்கள் மனம் விட்டுப் பேசினார். சென்ற சுமார் 15 அல்லது 20 வருட காலமாக தமிழ் இலக்கியங்களில் ஈடுபட்டுள்ளாராம். பத்து வருட காலம் ஒரு கல்லூரியின் அதிபராக இருந்து பின்னர் பிரதம கல்வி அதிகாரியாகத் தொண்டாற்றி ஓய்வு பெற்றவர் ‘பழைய தமிழ் இலக்கியங்களில் தான் எனக்கு அதிக இன்பம். திருக்குறளில் சுமார் ஆயிரம் குறள்களை சிங்களத்தில் மொழிபெயர்த்துள்ளேன். போப்பின் மொழிபெயர்ப்பு அவ்வளவு சரியல்ல’ என்று சொல்லி பல குறள்களை விளக்கினார். ‘குழலினிது யாழ் இனிது என்பர் தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்’ என்ற குறளில் தம் மக்கள் என்று வள்ளுவனார் கூறியதிலிருந்து இல்வாழ்க்கையால் இன்பமும் பயனும் குழந்தைகளால் தான் என்பதையே அவர் வலியுறுத்தியுளதாகவும், மற்ற குழந்தைகளும் மழலை பேசுவதாயினும் ‘தம் மக்கள்’ பேசும் மழலைதான் யாழினும், குழலினும் பார்க்க அதிக இன்பமுடையதென்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளது கவனிக்கற்பாலது என்று அவர் விளக்கியதிலிருந்து தமிழில் அவருக்கு எவ்வளவு ஆழ்ந்த விரிந்த அறிவு உள்ளதை அறியக் கூடியதாக இருந்தது.

இப்போது தமிழிலுள்ள ‘முத்தொள்ளாயிரத்தை’ சிங்களத்தில் மொழிபெயர்க்கிறாராம். அந்நூல்களைப் பற்றிய பெயரைத்தான் கேள்விப்பட்டிருக்கிறேனேயன்றி அது என்ன கூறுகிறதென்பது தெரியாது. அந்நூலில் முதல் 900 செய்யுள் சேர மன்னவரைப் பற்றியும் மற்றொரு 900 பாண்டிய மன்னர்கள் குறித்தும், மற்ற 900 சோழர்களைப் பற்றியதென்றும் கூறி அதன் அருமை பெருமைகளைப் பற்றி விளக்கினார். அவருடன் பேசிக்கொண்டிருந்த சுமார் ஒரு மணி நேரத்தில் பல விஷயங்களை அறிந்து கொள்ள முடிந்தது

தமிழிலுள்ள பல இலக்கியங்களையும் சிங்களத்தில் மொழிபெயர்த்துத் தருவது இரு சமூகங்களுக்கும் நல்லுறவு ஏற்பட உதவிசெய்யுமென்றும். அப்பணியையே தாம் செய்ய முயலுவதாகவும் ஒற்றுமையைப் பலப்படுத்தி வேற்றுமைகளைத் தவிர்க்க வேண்டியதே இப்போது மிக முக்கியமென்று அறிவுறுத்தினர் சிங்களவர்களில் இப்படி இன்னும் எவ்வளவு பேர் இருக்கிறார்களோ தமிழின் சுவைகண்டவர்கள் யாராயிலும், அதைவிடுவார்களா ? இன்னும் அவர் தமிழைப்பற்றி எவ்வளவோ சொன்னார் தமிழிலேயே ஒரு கட்டுரையும் எழுதியுள்ளாராம் அதை ‘ஈழநாட்’டில் பிரசுரிக்கத்தரவேண்டுமென்றுகேட்டேன் சிக்கிரத்தில் அதைக் அச்சில் அடித்துத்தருவதாக ஒப்புக் கொண்டார் அச்சிங்களத் தமிழ் அறிஞர்;

0 0 0

கொழும்பில் இவ்விதகமிழ் நூல்காட்சியை நடத்தியிராவிடில் இவ்வித அன்பரை எங்கே சந்திக்கப் போகிறேன்? அந்தக்காட்சிக்கு தினசரி பல தமிழ் மாணவர்களும், அன்பர்களும் வந்து தமிழில் வந்துள்ள புதிய நூல்களைப்பற்றி ஆவலுடன் தெரிந்துகொள்ளமுடிகிறது. காட்சி மாலை 5 மணிக்குத் திறக்கும்போதே வந்து இரவு 8 மணிக்கு ஜன்னல்களை மூடும் வரை இருந்து பார்க்கிறார்கள் இருந்து படிக்க நாற்காலி மேசை முதலிய வசதிகளைச் செய்திருந்தால் விருப்பமான புத்தகத்தை எடுத்துப்படித்து குறிப்புக்களை எடுத்துக் கொண்டிருப்பார்! அந்த

(8ம் பக்கம் பார்க்க)

## 'ஈழத்துக்கும் தமிழகத்துக்கும் கலைப்பாலமாக திகழ்கிறர்'

### தவில்வித்துவான் கணேசனுக்கு பாராட்டு

தாவடி, புதன்

தாயும் தந்தையும் இல்லாத குடும்பம் எவ்வளவு இன்னுபின்னப்படுமோ அதே போலத்தான் சுருதியும்-லயமும் இல்லாத சங்கீதமும் இருக்கும். ஒரு குடும்பத்தில் தகப்பனுனவன் எப்படியோ அதேபோன்று லயமும் அமைகிறது. லய வாத்தியங்களுள்ளே தவில்-கஞ்சிரா என்பன லேசாக வாசிக்கமுடியாதன. சுருதி வாத்தியமல்ல. பாடுகின்ற வர்களுடைய அல்லது வாசிக்கும் வாத்தியங்களுடைய சுருதிக்கேற்ப ஆதார சட்சமத்துடன் நாதத்தை நன்கு ஒன்றச் செய்த பின்னரே இவ்வாத்தியத்தைச் சிறப்பாக வாசிக்க முடியும். லயவாத்தியங்களாகிய தவிலையும், கஞ்சிராவையும் வாசிப்பதில் தவில் வித்வான் நாச்சிமார் கோவில் கணேசன் கைதேர்ந்தவர். ஈழத்திற்கும் தமிழகத்திற்கும் கலைப்பாலம் அமைத்த கலைப்பெருமக்களுள் இவர் ஒருவர்.

மேற்கண்டவாறு தமிழகம் சென்று இசை விழாவில் கலந்து தவில் வாசித்துப் புகழுடன் திரும்பியுள்ளதவில் வித்வான் திரு. கே கணேசனுக்கு திருநெல்வேலி நந்தி இசை மன்றம் வரவேற்பளித்தபோது அதில் கலந்துரையாற்றிய ரசிகமணி திரு. எஸ். செல்வநாயகம் கூறினர்.

நந்தி இசை மன்றத்தில் நடாத்தப்பட்ட இவ்வரவேற்புவிழாவுக்கு நியாயவாதி திரு. சி. சி. பொன்னையா தலைமைவகித்தார்.

"இசை மன்னர்" சித்தூர் சுப்பிரமணியம்பிள்ளை, திரு. கணேசனுக்குப் பொன்னுடை போர்த்திக் கௌரவித்தார். அவர் திரு. கணேசனைப் பாராட்டி பேசிய போது கூறிதாவது:

"லயம் என்பது காலப் பிரமாணத்தைக்காட்டுவது இசைக்குப்பிதா. இப்பேற்பட்ட பெருமை பொருந்திய லய வாத்தியமாகிய தவில்-கஞ்சிரா ஆகியவற்றை வாசிப்பதில் திறமையுடையவர் திரு. கணேசன். எனது கச்சேரிக்கு கஞ்சிரா பக்கவாத்தியம் வாசித்தபோது தான் அவரைப் பற்றி அறிந்தேன் லயவித்வான்கள் திரு. வி. தெட்சணமூர்த்தி, திரு. சின்னராசா, திரு. கணேசன் ஆகியோர் ஈழத்திற்குப் புகழ்தேடித்தருபவர்களே. அவர்கள் புகழ் பெறுக, கலைவளர இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்"

தவிலில் இனிய நாதத்தை அமைத்து சிறப்பாகக் கொண்டுவாசிக்கும் தன்மையையுடைய திரு. கே. கணேசனுக்கு நந்தி இசை மன்றம் "தவில் நாதமணி" என்ற பட்டத்தையும் அளித்துக் கௌரவித்துள்ளது.

தவில் வித்வான்கள் திரு. தெட்சணமூர்த்தி, திரு. சின்னராசா உட்படப் பல சங்கீத வித்வான்களும் இப்பாராட்டுவிழாவைபவத்தில் கலந்துகொண்டனர்.

## தீப்பெட்டி தட்டுப்பாடு

கலைப்பிட்டி, புதன்

வேலணைப்பகுதியில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நெருப்புப்பெட்டித் தட்டுப்பாடு நிலவுகின்றதாம். ஒரு வீட்டுக்கு நெருப்புப்பெட்டி விகிதம் விநியோகிக்கப்படுகின்றது. எனக்கூறப்படுகின்றது. கூட்டுறவுச்சங்கக்கடைக்குவரும் பகுப்பு. நெருப்புப்பெட்டி போன்ற பொருட்கள் தனியார் கடைகளிலும் விற்பனை செய்யப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

## மகா கும்பாபிஷேகம்

காலி, புதன்

ஸ்ரீ மீனம்பிகை ஸ்ரீசுந்தரேஸ்வரர் சமேதராக எழுந்தருளியிருக்கும் காலுவீவா சிவன்கோயிலின் மகா கும்பாபிஷேகம் விசேடமாகக் கொண்டாடப்பட்டது.

கடந்த 15 வருடங்களுக்குப்பின் மகா கும்பாபிஷேகம் இப்பொழுது நடைபெற்றுள்ளது. பல சைவ அன்பர்கள் முன்னின்று கோயிலைப் புனருத்தாரணம் செய்தனர்.

காலிப்பகுதியைச் சேர்ந்த சைவ அன்பர்கள் பலரும் இக் கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டனர். பௌத்த மக்களும் இக் கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்டது குறிப்பிடத் தக்கது.

## ரூ. 10 ஆயிரம் நகைகள்திருட்டு

அம்பன், புதன்

குடத்தனை கரையூரைச் சேர்ந்த குருநாதி சின்னையா என்பவரது வீட்டில் சங்கிலி காப்புகள் மோதிரங்கள், நெக்கிலஸ், அட்டியல் போன்ற நகைகள் நேற்று முன்தினம் இரவு வீடுதிறந்து களவாடப்பட்டுள்ளன. 10 ஆயிரம் ரூபா பெறுமதிக்குமேலான நகைகள் களவாடப்பட்டுள்ளதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

குழந்தைக்கு சுகவீனமாக ஆஸ்பத்திரியில்வைத்திருந்த சமயத்தில் இவரது வீட்டில் ஒருவரும் இல்லாத இரவு நேரத்தில் வீட்டுக்கதவுக்கு கள்ளத்திறப்புப் போட்டுத் திறந்து வீட்டுக்குள் வைத்திருந்த மூன்று பெட்டிகளையும் தூக்கிவைத்து விட்டு அடியில் நகைவைக்கப்பட்டிருந்த நகைப்பெட்டியை மாத்திரம் திறந்து உள்ளிருந்த நகைகள்யாவும் களவாடப்பட்டுள்ளதாகவும் இக்களவுக்கு கள்ளத்திறப்பைப் பயன்படுத்தியே களவாடப்பட்டுள்ளதாகவும் புலன் விசாரணையில் தெரியவந்துள்ளது. இதே வீட்டில் கடந்த வருடம் நகைகள் களவுபோனது தெரிந்ததே.

## யாழ்.—பருத்தித்துறை பஸ் சேவை சீர்கேடு

வல்வெட்டித்துறை, புதன்

உடுப்பிட்டியூடாகச் செல்லும் பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பஸ்சேவை மிகவும் சீர்கேடான நிலையிலிருப்பதாகவும், சில சமயங்களில் இரண்டு மணிநேரத்துக்கு ஒரு தடவைகூட பஸ்கிடைப்பது அரிதாக இருப்பதாகவும் பிரயாணிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

வடமராட்சி பகுதியிலிருந்து காலையில் உடுப்பிட்டியூடாக யாழ்ப்பாணத்தில் தொழில்செய்வதற்காக வருபவர்கள் மிகுந்த சிரமங்களுக்குள்ளாகின்றனர் கடுகதி பஸ்கூட அரைமணிநேரம் ஒருமணிநேரம் என்று குறிப்பிட்ட நேரத்தைக் கடந்து சேவையில் ஈடுபடுவதால், யாழ்ப்பாணம் வந்துசேர காலை 10 மணியாகிவிடுகிறதாம்.

யாழ்ப்பாணத்திலிருந்து இந்தப் பகுதிக்கு செல்லும் மக்கள்கூட அநேகமாக மூன்று மணி நேரத்துக்கு மேலாக நேரத்தை செலவிட்டு 'தவம்' இருந்த பின்னரே பஸ்ஸைப் பிடிக்க முடிகிறதாம்.

உடுப்பிட்டியூடாகச் செல்லும் இந்த பஸ்சேவை சீர்கேடு குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பல தடவை புகார் செய்தும், இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை யென பிரயாணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

பச்சிலைப்பள்ளி, புதன்

இலங்கை கடற்றொழில் கூட்டுஸ்தாபனம் இப்பகுதியில் மீன் கொள்வனவு செய்ய தாளையடி, கண்டிக்குளம் ஆகிய இடங்களில் கிளை யலுவலகங்களைத் திறந்துள்ளது.


# சேற்றிலும் சகதியிலும் காலை முதல் மாலை வரை அயராது உழைக்கும் உங்களுக்கு இதோ!

கணப்பொழுதில் செயலாற்றும்,
புது முறை அசல்




# வின்சென்ட்ஸ்

(இளஞ் சிவப்பு) வில்லைகள்



விரிவான விஞ்ஞான ஆராய்ச்சியின் விளைவாக உருவாக்கப்பட்டுள்ள உடனுக்குடன் மூவ் வழியில் செயலாற்றும் புது முறை வின்சென்ட் ஏஎஸ்ஸி இளஞ் சிவப்பு வில்லைகள் தலையிடி, நோவு, வலி, காய்ச்சல் ஆகியவற்றிலிருந்து உங்களுக்கு உடனடியாகவும் நிலையாகவும் நிவாரணந் தந்து, ஊக்கமும் உற்சாகமும் உடல் நலமும் உடையவர்களான உணர்வை மீட்டுத் தருகின்றன. வலி, காய்ச்சல் என்பன நிலைத்து நின்றல் உங்கள் வைத்தியரைக் காணுங்கள்.

உட்கொள்ளுங்கள்
முவ் வழிச் செயற்பாடுடைய

அசல்
(ரோஜாவர்ணம்)
வின்சென்ட்ஸ்
ஏ.எஸ்.சீ
வில்லைகள்




முவ் வழிச் செயற்பாடுடைய வின்சென்ட் இளஞ்சிவப்பு வில்லைகள்
விரைவில் செயலாற்றுவன; பாதுகாப்பானவை; நிச்சய குணமளிப்பன.

## ஆசிரியர் இல்லாமையால் பாடசாலை மூடப்பட்டது

பச்சிலைப்பள்ளி, புதன்

கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் சென்ற ஒரு வருட காலமாக ஒரேயொரு ஆசிரியர் மட்டுமே கடமை புரிந்தார் அவர் 1-2-71 தொடக்கம் வெலிமனை தமிழ் மகாவித்தியாலயத்திற்கு இடமாறம் பெற்றுச் சென்றுள்ளார். அவரின் இடத்திற்கு நியமனம் பெற்ற ஆசிரியர் வராத காரணத்தினுல் கடந்த ஒரு வாரமாகப் பாடசாலை மூடப்பட்ட நிலையிலிருக்கின்றது இதுபற்றி உடன் நடவடிக்கைமேற்கொள்ளுமாறு கல்வியமைச்சர், வித்தியாதிபதி, கிளிநொச்சி ஆட்சிமன்ற உறுப்பினர் ஆகியோருக்கு பொதுமக்களும், சங்கங்களும் தந்தி மூலமும், கடித மூலமும் அறிவித்துள்ளனர்

## பயங்கர ஆயுதங்கள் வைத்திருந்தார்களாம்

காலி, புதன்

சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியதாகவும், பயங்கர ஆயுதங்கள் வைத்திருந்ததாகவும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட 14 பேரைத் தலா 2,000 ரூபா பிணையில் செல்லுமாறு காலி மாஜிஸ்திரேட் திரு. ஜே. சேனதிராஜா உத்தரவிட்டார்.

கடந்த மாதம் 20ந் திகதி காலிமகால் என்னுமிடத்தில் சட்டவிரோதமாகக் கூடியதாகவும், பயங்கர ஆயுதங்கள் வைத்திருந்ததாகவும் என் ஏச். ரஞ்சித். டபிள்யூ. ஏச் கீர்த்திசேன அல்லது கீர்த்தி. ஜி சந்திரசிறி, கே. எல். சோமசிறி, பி. ஏ வில்பேட், கே ஏச். டாள்சன், ஏச் பி.சிறிசேன. எஸ் வி காமினி, கே ஏச் பீரிஸ், ஆர் பி தர்மசிறி ஆர் பி தர்மசேன, டபிள்யூ என் பி குணபால, என் ஜினதாச, வி டொன் ஜெயசேகரா ஆகியோர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

காலிமகால் என்னுமிடத்தைச் சேர்ந்த பி பி லயனல் என்பவரின் சாட்சியத்தில் முற்குறிப்பிட்ட சந்தேகநபர்கள் 14 பேரும். ஏனைய சிலரும் ஒரு பஸ்ஸில் ஆயுதங்களுடன் வந்ததாகவும், பொதுமக்களை அச்சுறுத்தியதாகவும் தெரிவித்திருந்தார்.

காலி உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் டி ஜயகுமாரன் ஸ்தலத்திற்கு விரைந்து சந்தேக நபர்களைக் கைது செய்ததோடு அவர்களிடமிருந்து உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ரிவோலர்களையும், ஏனைய ஆயுதங்களையும் கைப்பற்றியிருந்தார்.

மாஜிஸ்திரேட் சந்தேக நபர்களைப் பிணையில் செல்ல அனுமதித்து இம்மாதம் 20ந் திகதி வழக்கு விசாரணைக்கும் உத்தரவிட்டார்.

— —

### தற்கொலை

மாவிட்டபுரம், புதன்

கோவில் ஒன்றில் சுருக்கிட்டுத் தற்கொலைசெய்து கொண்டார் ஒருவர். வசாவிளானில் இச்சம்பவம் நிகழ்ந்தது பொன்னையா சின்னப்பு என்ற வயோதிபரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்ட வராவார். குடும்பத்தகராறு காரணமாக வாழ்க்கையில் வெறுப்படைந்து இவ்வயோதிபர் தற்கொலை செய்துகொண்டதாக விசாரணையில் தெரிய வந்தது

இவரின் மரணம் சம்பந்தமாக திடீர்மரண விசாரணை அதிகாரி திரு எஸ். சுந்தரமூர்த்தி விசாரணை நடாத்தி தற்கொலை எனத்தீர்ப்பளித்தார்

விசாரணைக்கான ஏற்பாடுகளை சார்ஜன்ட் கொலின்ஸ் செய்திருந்தார்.

— —

### சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், வியா

அக்கராயன்குளம் வக்கின விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேக வருடாந்த உற்சவந்தைமுன்னிட்டு இன்று காலை மகாசங்காபிஷேகம் நடைபெறுகிறது.

— —

### தாளையடி சாம்பியன்

அம்பன், புதன்

பச்சிலைப்பள்ளிக் காரியாதிகாரி பிரிவு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இறுதியாக தாளையடி சென்ற் அந்தனீஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் கட்டைக்காடு சென்மேரீஸ் விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் தாளையடி திறந்தவெளியரங்கில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில்தாளையடி சென் அந்தனீஸ் விளையாட்டுக் கழகம் 9—0கோல்களைப் போட்டு மேற்படி. காரியாதிகாரி பிரிவுச் சாம்பியனாகியது.

பச்சிலைப்பள்ளிக் காரியாதிகாரி திரு சோ. அருணாசலம் தலைமையில் நடைபெற்ற சாம்பியன் தெரிவுக்கு விளையாட்டுப் போதனாசிரியர் திரு தொ. சவரிமுத்து மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

சனசமூகநிலையசமாசம்

### தேசியவிழா கொண்டாடமுடிவு

யாழ்ப்பாணம், வியாழன்

கலைநிகழ்ச்சிகளையும், விளையாட்டுப் போட்டிகளையும் காரியாதிகாரி பிரிவுகளிலும் நடாத்தி இறுதிவிழாவைத் தேசிய விழாவாக யாழ் நகரில் கொண்டாடவேண்டும்.

சமீபத்தில் நடைபெற்ற யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசப் பொதுக்கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது உள்ளூர் உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

மாதந்தோறும் யாழ் மத்திய கல்லூரியில் நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படத்தக்கவகையில் கருத்தரங்குகள் நடாத்துதல் மாதாமாதம் 'சமூகத்தொண்டன்' வெளியிடுதல் ஆகியனவாகும்.


மேற்படி சமாசத்தின் வேண்டுகோளுக்கிணங்க ஆணையாளர் 1967 68,69-ம் ஆண்டுகளுக்குரிய நன்கொடைப்பணத்தை நிலையங்களுக்குக் கொடுப்பது எனவும் புதிய சமூகநிலையங்களை சமாச சிபார்சுடன் பதிவு செய்து அதற்கு நன்கொடைவழங்குவதாகவும் ஆணையாளர் திரு. நல்லைநாதன் உறுதியளித்துள்ளார்

......

### திருக்கேதீஸ்வர யாத்திரை

யாழ்ப்பாணம், வியாழன்

எதிர்வரும் மகாசிவராத்திரி தினத்தை முன்னிட்டு சங்கானை மேற்கு சனசமூக நிலையத்தினர் திருக்கேதீஸ்வரப் புனித யாத்திரையை மேற்கொள்ளவிருக்கிறார்கள்



இலங்கை பாடசாலை உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன், யாழ்ப்பாண பாடசாலை விளையாட்டுச் சங்கத்தினுல், அகில இலங்கை மாவட்டப் பாடசாலை சாம்பியன் கோஷ்டிகளிடையே முதன்முறையாக யாழ். நகரில் நடைபெற்ற உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியில், சாம்பியனுகத் தெரிவு செய்யப்பட்ட தெல்லிப்பளை மகாஜனுக் கல்லூரி கோஷ்டியினர் "சேர் ஜோன் டாபட்' வெற்றிக் கேடயத்துடன் காணப்படுகின்றனர் (தே. நி)

### புதிய நிர்வாகிகள்

சங்கானை, புதன்

சங்கானை ஸ்ரீ கூடத்தம்பான் கோவில் பரிபாலன சபை அங்கத்தவர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்

தலைவர்: வயிரவிப்பிள்ளை கனகரத்தினம், காரியதரிசி: எஸ். திருநாவுக்கரசு தனாதிகாரிகள்: எஸ்.கே. திருச்சிற்றம்பலம், தம்பு ஐயாத்துரை, குமாரசுவாமி சிவசுந்தரம்.

அண்மையில் கோவில் பரிபாலகர்கள், பொதுமக்கள் ஆகியோர் கூடிய பொதுக் கூட்டத்தின் தீர்மானப்படி கோவில் உரிமையாளர்கள் கோவில் நிர்வாகத்தை பரிபாலன சபைக்குக் கையளித்தது குறிப்பிடத்தக்கது. ஆலய நிர்மாண வேலைகளை மேற்படி சபையினர் ஆரம்பித்துள்ளனர்.

0 0 0

யாழ்ப்பாணம், வியா

யாழ் மத்தியகல்லூரிஉயர்தர மாணவர் மன்ற நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. ஈ. சபாலிங்கம் [அதிபர்], திரு. ம. பரமானந்தன். தலைவர்: செல்வன் சு. பா. பாலசுப்பிரமணியன். உப தலைவர்: செல்வன் எஸ் குணரத்தினம் காரியதரிசி, செல்வன்: எஸ்.வாசுதேவன், உபகாரியதரிசி: செல்வன் ஏ. இரகுநாதன், தனாதிகாரி, கே. சிவாஜீ.

0 0 0

அல்லைப்பிட்டி, புதன்

வேலணை ஐக்கிய விளையாட்டுக் கழக வருடாந்தப் பொதுக்கூட்டம் கழக அரங்கில் நடைபெற்றபோது நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அமைப்பாளர்: க திரு லோகமூர்த்தி. தலைவர்: எஸ் கே பாலசுப்பிரமணியம், உபதலைவர்: ஐ சிவராசா, செயலாளர்: டாக்டர்: கே கே ஜெ. ஜெயச்சந்திரமூர்த்தி, துணைச்செயலாளர்: கைபாலசுந்தரம், பொருளாளர்: செ இராசசிங்கம்.

வருடாந்த விளையாட்டு விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாடுவது என்றும் ஆலடி வைரவர் கோவில் திருப்பணி வேலையைத் தொடர்ந்து மேற்கொள்வது என்றும் தீர்மானிக்கப் பட்டது

0 0 0

சுல்லைப்பிட்டி, புதன்

சரவணை சின்னமடு றோமன் கத்தோலிக்கப் பாடசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர். தலைவர் கு. சபாரத்தினம், காரியதரிசி: கு. பத்மநாதன், தனாதிகாரி கு மத்தியாஸ். நிர்வாகசபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

0 0 0

ஊர்காவற்றுறை புதன்

மேரிஸ் பெண்கள்பாடசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர் தலைவர்; வண. சகோதரி மெக்ரலின் உப தலைவர் ஏ. எவ். செல்லத்துரை காரியதரிசி திருமதி புனிதசீலி அந்தோனி பர்னாந்து, உபகாரியதரிசி: திருமதி லூர்த்தம்மா அந்தோனிப்பிள்ளை தனாதிகாரி: திருமதி சுகிர்தம் பர்னாந்து.

## 'வழக்கறிஞர்களுக்காகவே ஒற்றுமை முன்னணி'

### வட்டு எம். பி. கூறுகிறார்

யாழ்ப்பாணம், புதன்

'நீதிமன்றங்களில் சிங்களம் புகுத்தப்படவிருப்பதால், பாதிக்கப்படவிருக்கும் சகல தமிழ்க் கட்சிகளையும் சேர்ந்த வழக்கறிஞர்கள் தான் வல்வெட்டித்துறையில், ஒற்றுமை முன்னணி அமைத்தார்கள் நான் வழக்கறிஞராக இல்லாத படியால் அக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை'

வட்டுக்கோட்டை தமிழ் காங்கிரஸ் எம். பியான திரு. ஏ. தியாகராசா தமிழர் ஒற்றுமை முன்னணி பற்றி கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு கூறினர்.

திரு தியாகராசா மேலும் கூறியதாவது! கூட்டம்கூடப்பட்ட இடம் தமிழரசு உறுப்பினரின் தொகுதியை சேர்ந்தது. கூட்டத்திற்கு தலைமை தாங்கியவரும், தமிழரசு கட்சியை சேர்ந்தவராம். அக்கூட்டத்தில் கலந்து கொண்ட எம். பிக்களும் தமிழரசுக் கட்சியை சேர்ந்தவர்கள். நடவடிக்கைக் குழுவிலும் தமிழரசுக் கட்சியினருக்கு கூடிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் ஒற்றுமை எப்படி ஏற்படும். தமிழரசு கட்சியினர் தான் இதற்கு பின்னணியில் நின்றிருக்கின்றனர்.

தமிழரசு தலைவர் திரு. செல்வநாயகமோ, தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. பொன்னம்பலமோ கலந்து கொள்ளவில்லை. இந்த முன்னணியினுல் எவ்வித பயனும் ஏற்படப்போவதில்லை. இதற்கும், எங்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

### உடற் பயிற்சிப் போட்டி

வேலணை, புதன்

தீவுப்பகுதிப் பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டி இம்மாத இறுதியில் ஆரம்பிக்கவிருப்பதாக தெரியவருகின்றது. இப்போட்டியில் இப்பகுதியில் உள்ள பல பாடசாலைகள் பங்குபற்றுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

### திருக்குமரனுக்கு வெற்றி

மாவிட்டபுரம் புதன்

உரும்பிராய் தெற்கு சிங்கன்கண்டி சனசமூகநிலையமும், உடும்பிராய் மேற்கு திருக்குமரன் கிராம முன்னேற்றச்சங்கமும் மோதிய உதைபந்தாட்டப் போட்டியில் திருக்குமரன் கிராம முன்னேற்றச்சங்கம் வெற்றி பெற்றது.

வலி-கிழக்கு காரியாதிகாரிபிரிவில் நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளின் ஒரு அங்கமாக நடந்த இப்போட்டியின் இறுதியில் திருக்குமரன் கிராம முன்னேற்றச் சங்கம் 3—1 கோல்களால் வெற்றிபெற்றது இப்போட்டிக்கு ஜெயராசா மத்தியஸ்தம் வகித்தார்.

இப்போட்டிக்குப் பிரதம விருந்தினராக வலி-கிழக்குக் காரியாதிகாரி திரு. எஸ். கந்தப்பிள்ளை கலந்துகொண்டார்.

......

### பௌத்தம் அரசாங்க மதமாகவேண்டும்

கோட்டை, புதன்

பௌத்தமதம் ஸ்ரீலங்காவின் அரசாங்க மதமாகப் பிரகடனப் படுத்தப்பட வேண்டும் என்று பௌத்த இளைஞர் சங்கம் அரசியல் திட்ட அமைப்பு அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவுக்கு சமர்ப்பித்துள்ள மகஜர் ஒன்றில் தெரிவித்துள்ளது

வெளிநாட்டார் இலங்கையை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த 450 ஆண்டுகளிலும், சுதந்திரம் கிடைத்த கடந்த 23 ஆண்டுகளிலும் இங்கு பௌதத மதம் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளது. என்று மேற்படி சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

# அரசியல் என்ன என்பது மக்களுக்குப் புரிந்துவிட்டது

## பாஷையூரில் தபால் அமைச்சர்

யாழ்ப்பாணம், வியா.

ஐந்து வருடத்துக்கு ஒரு தடவை கார்களில் பல வர்ணக்கொடிகளை கட்டிக்கொண்டுசென்று மேடைகளில் மாற்றுக்கட்சியினரைத் தாக்கிப் பேசிவந்ததுதான் அரசியல் என்று மக்களை நம்பச்செய்தகாலம் மலையேறிவிட்டது. அரசியல் என்றால் என்னவென்று இன்று இந்த நாட்டின் ஒவ்வொருபிரஜைக்கும் தெரிந்திருக்கிறது ஆகலால் இனிமேலும் எவரும் அரசியலை ஒரு தொழிலாகக்கொண்டு மக்களை ஏமாற்ற முடியாது"

பாஷையூர் சனசமூகநிலைய ஆண்டுவிழாவில் தபால் மந்திரி திரு செ. குமாரசூரியர் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்

திரு குமாரசூரியர் மேலும் கூறியதாவது:-

சோஷலிஸம் என்று பலர் பேசுகிறார்கள், இலங்கையில் இன்றுள்ள அத்தனை அரசியல் கட்சிகளும் சோஷலிஸம் பற்றி பேசுகின்றன இந்த நிலையிலும் இங்கு ஒதுக்கப்பட்டமக்கள் வாழமுடியாதவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் சோஷலிஸம் என்றால் என்ன முதலாளித்துவம் என்றால் என்ன என்பதை ஒவ்வொருவரும் அறிந்துகொள்ள வேண்டும். ஒரு நாடு சோஷலிஸப் பாதையில் முன்னேற திட்டமிடப்பட்ட பொருளாதாரம் அவசியம். பாடசாலைகள் இருக்கும். அங்கே விளையாட்டுமைதானம் இருக்காது, இதுதான் முதலாளித்துவத்தின் பெரும்கோளாறு இவ்வித கோளாறுகளை ஒழிக்க திட்டமிடப்பட்டபொருளாதாரம் வேண்டும்.

அரசாங்கம் என்றால் தேவலோகத்திலிருந்துவந்ததல்ல மக்களால் ஏற்படுத்தப்பட்டதுதான் அரசாங்கம், ஆகலால் இந்நாட்டின் பிரஜை ஒவ்வொருவருக்கும்அரசாங்கத்தில் பங்குண்டு, ஏழைகள் ஏழைகளாகவே இருக்கும் நிலை நீடிக்கவேண்டுமா? இதனை மாற்றத்தான் நாம் பாடுபட்டுவருகிறோம், இந்த மாற்றத்தை இரத்தக்களரியின்றி மெதுவாக கஷ்டமின்றி நேர்மையானபாதையில் செய்துவருகிறோம்.

இலங்கையின் ஒருபகுதிதான் யாழ்ப்பாணம், ஆகலால்நாம் எல்லோரும் இலங்கையர் என்று கருதி சோஷலிஸ ஆட்சியை நிறுவ ஒத்துழைக்கவேண்டும்

தனிப்பட்ட முறையில்மந்திரிகளைச் சந்தித்து அது வேண்டும், அது வேண்டும் எனச் சிலர் கேட்பதுபோல கேளாமல்கூட்டாக சேர்ந்து உங்கள் தேவைகளைக்கேட்டு நிறைவேற்றிக்கொள்ளலாம்

ஒருமைப்பாடுபற்றிப்பலர் பேசுகிறார்கள் ஒருமைப்பாடு என்று கூறும்போதுதானி இனமில்லை என்று அர்த்தமல்ல தனித்துவத்தைப் பேணும் ஒருமைப்பாடாக அது அமையவேண்டும் எந்த சோஷலிஸ நாட்டிலும் தனிமனிதனுக்குரிய தனித்துவம் பேணப்படுகிறது

தமிழ் மொழிமேல் எங்களுக்கு காதல் உண்டு அதே போல் தங்கள் மொழிமேல் சிங்களவர்களுக்குக் காதல் உண்டு. இந்த இரண்டு மொழிகளுக்குமிடையில் ஒரு பால அமைப்பு இல்லையா? தமிழரும் சிங்களவரும் நல்லெண்ணத்தோடு ஒருவரையொருவர் புரிந்துகொள்ளத் தொடங்கினால் எல்லாவித சிக்கல்களும் தீர வழியுண்டு

மக்கள் அரசாங்கம் தனித்துவத்தைப் பேணவில்லையா? நாவலருக்கும், ஆனந்தக்குமாரசுவாமிக்கும் நினைவுமுத்திரை வெளியிட முடிவுசெய்து, அதற்கான ஒழுங்குகள் செய்வது தனித்துவமில்லையா? நாவலர் வாரிசுஎன்று தங்களைக் கூறிக்கொள்வோர் வெளிநாட்டிலிருந்து தமிழ் நூல்களை இறக்குமதிசெய்து படிக்கிறார்களே, இங்கு தமிழ் அறிஞர்கள் இல்லையா? தரமுள்ள நூல்கள் இங்குவெளியிடமுடியாதா? ஆங்கில அறிஞர்கள் பலர் இங்குஇருப்பதாக கூறிக்கொள்கிறார்கள் ஆனால் இங்கு எவரும் ஆங்கில நூல்கள் வெளியிடமுன்வரவில்லை, இந்தியாவில்பாரதப் பிரதமர் நேரு மற்றும் எத்தனையோ அறிஞர்கள் ஆங்கிலத்தில் நூல்கள்வெளியிட்டிருக்கிறார்கள்- நமது சிறுவர்கள் சிங்களம்படித்து சிங்கள நூல்கள் எழுதவேண்டும்: சிங்களம் மட்டுமல்ல ஆங்கிலம் ரஷ்ய மொழிகளை கற்று அந்தந்த மொழிகளில் நூல்கள்வெளியிடவேண்டும் அப்பொழுதுதான் நமக்குப் பெருமையுண்டு- தமிழ் மொழிக்காக பாடுபடும்நாம் அதனை இங்குவளர்க்காமல் வெளிநாட்டிலிருந்து நூல் வடிவில் கப்பலில் இறக்குமதி செய்வது பெருத்தஅவமானமாகும்.

## ஐயாறன்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இடத்தைவிட்டு அசையமாட்டார்கள்! நாடுவிடுதலையானபின் இங்கு வெளியான தமிழ்நூல்கள்பற்றி யாருக்கும்முழுவிபரமும் தெரியுமா, எங்கே இவற்றை ஒருங்கே பார்க்க வாய்ப்புகிடைக்கப்போகிறது.

காட்சியை ஆரம்பிக்கு முன் சுமார் 550 நூல்கள்தான் கிடைத்தனவாம். பின்னர் 50 நூல்களுக்கு மேல் கிடைத்துள்ளதாகவும் இன்னும் கிடைத்துவருவதாகவும் தெரிவிக்கிறார், இதில் ஈடுபட்டவருள் ஒருவரும், கொழும்பு பொதுநூல் நிலைய உதவி அதிகாரியுமான கமால்தீன் அவர்கள். எங்கோ மூலையில் புதைந்து படிப்பாரன்றி கிடந்த பல நூல்கள் விடுதலைபெற்று தலைநகரில் பலருக்கும் பயன்படும்முறையில் காட்சிஅளிக்கின்றன. உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு, இலங்கை எழுத்தாளருக்கும் பொதுமக்களுக்கும்செய்துள்ள இவ்வரும்பணி நன்றியுடன் போற்றத்தக்கது. இந் நூல்களைப் பற்றி மிக சிரமப்பட்டு தயாரித்துள்ள பட்டியலின் இரண்டாம் பதிப்பைத் தயாரித்து பல இடங்களிலும் விற்பனைக்கு கிடைக்கும்படிசெய்தால் மிக நன்மையாக இருக்குமென்று ஓர் அன்பர் தெரிவிக்கின்றார்,

வருகிற 15ந் திகதியுடன் கொழும்பில் இக் காட்சி முடிகிறது பல எழுத்தாளர்களும் பல கலைக்கழக மாணவர்களும் தமிழ் அறிஞர்களும் ஆவலுடன் வந்து பார்ப்பதால் இக்காட்சியை நீடிக்கவேண்டுமென்றும், யாழ்ப்பாண நூல்நிலயத்தில் இவ்விதமான தமிழ்நூல்காட்சியைநிரந்தரமாக வைக்கவேண்டுமென்றும் பலர் விருப்பம் தெரிவிக்கின்றார்கள். இக்காட்சியில்வைத்துள்ளதமிழ் நூல்களைப் பார்த்து வீட்டு அவற்றில் சில வற்றை விலைக்கு வாங்க, அவற்றின் ஆசிரியர்களுக்கும்பிரசுரகர்த்தாக்களுக்கும் சிலர் எழுதுவதாகத்தெரிகிறது. அடுத்த ஆண்டிலே கொழும்பில் நடைபெற விருக்கும் உலகத்தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டுக்கு முன்னோடியாக நடைபெறும் இக்காட்சி மிகப்பயனுள்ளதோர் பணியாகும் இதற்கு ஒழுங்கு செய்தவர்களுக்கும் இதில் ஈடுபட்டு நற்றொண்டாற்றியவர்களுக்கும் ஈழத் தமிழரின் நன்றி உரித்தாகும்,

இப் பத்திரிகை "ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 68 - ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 11-ந் திகதி வெளியிடப்பட்டது.

## அமெரிக்காவில் பூகம்பத்தில் 30 பேர்பலி

வாஷிங்டன், பெப்.10

அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்தில் பயங்கரபூமிநடுக்கம் ஏற்பட்டு சுமார் 30பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள் 60 ஆயிரம்பேர் இடிபாடுகளுக்கிடையிலும் வேறுவகையிலும் மாட்டிக்கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. லொஸ் ஏஞ்சலஸ் பகுதியில் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றது.

கலிபோனியாவில்பேரிடர் நிலைமை உருவாகியிருப்பதாக அதிபர் நிக்ஸன் அறிவித்திருக்கிறார்.

## நிரூபிக்கத் தயார்

யாழ்ப்பாணம், வியாழன்

"வல்வெட்டித்துறையில் ஒற்றுமை மகநாடு நடந்த அதே தினத்தில் இணுவில் சந்தைமைதானத்தில் நடந்த ஒருகூட்டத்தில் திரு ஆலாலசுந்தரம், என்னை ஒரு முட்டாள் என்றும் தியாகராசா ஒரு மடையன் என்றும்பேசியதை மறுக்கமாட்டார் என நம்புகிறேன். இப்படிப்பேசுபவர்கள் எக்காலமுமே ஒற்றுமையை நிலைநிறுத்தமாட்டார்கள், கூட்டத்தில் கலந்துகொண்டபலரைசாட்சியாக வைத்து இதனை நிரூபிக்கத் தயாராகவிருக்கின்றேன்"

இவ்வாறு நல்லூர் எம் பி திரு சி அருளம்பலம் நேற்றுத் தெரிவித்துள்ளார்

நேராக ஒற்றுமை மகாநாட்டிலிருந்து வருவதாகவும் திரு ஆலாலசுந்தரம் தமது பேச்சில் கூறினார் என்றும் நல்லூர் எம் பி தெரிவித்தார்

## சத்தியாக்கிரகம் நடக்கவில்லை

யாழ்ப்பாணம், வியாழன்

கரவெட்டி ஸ்ரீ நாரதவித்தியாலயத்தின் முன் சத்தியாக்கிரகமோ, பகிஷ்கரிப்போ நடைபெறவில்லையென்று தலைமை ஆசிரியர் திரு க நடேசன் தெரிவித்துள்ளார்.

திரு நடேசன் மேலும் தெரிவிக்கையில், இப்பாடசாலையில் 5 வருடமாக சம்பளமின்றி கடமையாற்றிவரும் 15 ஆசிரியர்களில் 11 பேருக்கு 100 ரூபா வீதம் வாழ்க்கைப்படி வழங்கப்பட்டு வருவதாகவும் இவர்களில் எவருக்கும் நியமனம் வழங்கப்படவில்லை என்றும் கூறினார்.

# குளத்தில் மிதந்த சடலம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த ஐயம்பிள்ளை இராசையா (55 வயது) யாழ்ப்பாணம் வண்ணான் குளத்தில் இறந்து கிடந்தார் இவரது சடலம் மிதந்தபோது கண்டுபிடிக்கப்பட்டது.

மரண விசாரணை அதிகாரி திரு கொலின் மெண்டிஸ் மரணவிசாரணை நடத்தினார்

யாழ் பொலிஸ் நிலயத்தைச் சேர்ந்த திரு ந இரத்தினம் சாட்சியமளிக்கையில், இரவு வேலையின் போது நானும் அசமடனும் சென்றுகொண்டிருந்தோம் அப்போது லைட் அடித்துப் பார்த்தபோது ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கையில் ஒருவர் ஓடினார் அவரைக் கலைத்துக்கொண்டு சென்றோம் அவர் ஓடிச் சென்று வண்ணான் குளத்துக்குள் பாய்ந்துவிட்டார் நான் அசமடனை நீந்திப் பார்க்கும்படி கூறினேன் அவர் நீந்திப் பார்த்துவிட்டு திரும்பி வந்தார் சேறாக இருப்பதால் பார்க்க முடியாதிருப்பதாக சொன்னார் அடுத்த நாள் வந்து பார்த்த போது சடலம் மிதந்து கிடந்தது என்றார்

இறந்தவரின் தாயார் சின்னம்மா சடலத்தை அடையாளம் காட்டினார் தனது மகன் நிரந்தர வசிப்பிடமில்லாமலும் வேலை இல்லாமலும் இருந்துவந்ததாகச் சாட்சியத்தில் கூறினார்

மூச்சுத் திணறி மரணம் ஏற்பட்டதாகத் தீர்ப்பில் கூறப்பட்டது.

## இந்தோசீனாவில் இறந்தோர் தொகை 855,350

சைகோன், பெப். 10

இந்தோசீனச் சண்டை முதலில் வியட்னாமில் மாத்திரமே நடைபெற்றுவந்தது இப்பொழுது கம்போடியாவுக்குள் பரவி, லாவோஸுக்குள்ளும் விஸ்தரித்துள்ளது. இந்தச் சண்டையில் ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியாகியுள்ளன.

அமெரிக்கத் தகவல்களின் படி குறைந்தது 115 000 தென்வியட்னாமியரும். 44 350 அமெரிக்க சிப்பாய்களும், 700,000 கம்யூனிஸ்டுகளும் இந்தப் போரில் பலியாகியிருக்கிறார்கள்.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் இப்பகுதியில் தொடர்ந்து போர் நடந்துவருகிறது ஆனால் 1950ம் ஆண்டுவாக்கில்தான் அமெரிக்கா இதில் சம்பந்தப்பட ஆரம்பித்தது இந்தோசீனாவில் வியட்நாமியர்களுக்கு எதிராகப் பிரான்ஸியர் நடத்திய போருக்கு ஆதரவாக அமெரிக்கா தலையிட்டது. இது 1954ல் முடிவடைந்தது இதனால் இரு வியட்னாம்கள் ஏற்பட்டன.

## விமான பிரயாணிகள் பொருட்கள் சோதனைக்குள்ளாகும்

சென்னை, ஜன 10

சென்னையிலிருந்து பம்பாய் போன்ற இடங்களுக்கு விமானமூலம் பயணம் செய்யும் பிரயாணிகளின் பொருட்களை நன்றாகப் பரிசோதனை செய்ய வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்திய எயர்சேவையைச் சேர்ந்த போக்கர் விமானமொன்றை பாகிஸ்தானுக்குக் கடத்திச் சென்றதையடுத்து முன்னெச்சரிக்கையாக இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2வது ஆண்டுவிழா

மாவிட்டபுரம், புதன்

ஏழாலை மேற்கு முத்தமிழ் மன்ற 2வது ஆண்டுவிழா இம்மாதம் 16ந் திகதி நடைபெறவிருக்கிறது.

திரு. சி சண்முகவடிவேல் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி உட்படப் பலர் கலந்துரையாற்றுவர்.

## மரண அறிவித்தல்

சாவகச்சேரி டிஸ்றிக் கோர்ட்டு உத்தியோகத்தர், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், நாகம்மாவின் புத்திரனும், சுப்பிரமணியம், சிதம்பரப்பிள்ளை, சுந்தரலிங்கம், தெய்வானைப் பிள்ளையின் சகோதரரும், ஈஸ்வரதாஸ் சத்தியதாஸ், சுசந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையுமான தம்பு கைலாசபிள்ளை காலமாகிவிட்டார். ஈமக்கிரிகைகள் சாவகச்சேரியில் 11-2-71 பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் அறியத்தருகின்றோம். த. சுந்தரலிங்கம், சங்கத்தானை, சாவகச்சேரி, 10-2-71.

2461

## மாவரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கு காரியாதிகாரிபிரிவுகளையும் நேரில் சென்று பார்வையிடுவர்.

14-ம் திகதி காலை தென்மராட்சி, பளை, காரியாதிகாரி பிரிவுகளையும் மாலை பூநகரி காரியாதிகாரி பிரிவையும் பார்வையிடுவார்கள்

15-ம் திகதி நெடுந்தீவு காரியாதிகாரி பிரிவுக்குச் சென்று அங்குள்ள பனைவளம் பற்றியும் உற்பத்தி பற்றியும் ஆராய்ந்து திரும்புவர்.

(பூநகரி நிருபர்)

டெல்அவிவ், பெப் 10

கப்பல் போக்குவரத்துக்கு சூயஸ்கால்வாயைத் திறந்துவிடுவதற்காக ஐக்கிய அரபுக்குடியரசு தெரிவித்த யோசனைகளை இஸ்ரேல் நிராகரித்துவிட்டது.

ஒரு தலைப்பட்சமான வாபஸ் நடைமுறை சாத்தியமில்லை. ஒப்பந்தம் ஒன்று ஏற்படாமல் நாங்கள் விலகிச் செல்வது பற்றி ஆராயத் தயாராயில்லையென்று இஸ்ரேல் தெரிவித்திருக்கின்றது.


# திருமணப் பதிவு

உடுவில் ஆட்சிமன்றப் பிரதிநிதி
திரு. வி தர்மலிங்கம் அவர்களின் புதல்வி
திருநிறை செல்வி சித்திரலேகாவிற்கும்
புலோலியைச் சேர்ந்த
திருநிறை செல்வன்
டாக்டர் மயில்வாகனம் இராமச்சந்திரன்
அவர்களுக்கும் இம்மாதம் 5-ம் திகதி திருமணப்பதிவு நடைபெற்றது.

2771